கிறிஸ்தவம்

# திருச்சபைச் சரித்திரம்



121809

ஆசிரியர் கல்விப் பாடநெறி

எழுத்தாளர் : திரு. பயஸ் பெர்ஞன்டோ

பாடப் பதிப்பாசிரியர்கள் :
அருட் தந்தை அலெக்ஸ் தசநாயக
அருட் சகோ. சைமன் பெர்ஞன்டோ
ஒஸ்டின் டயஸ்
எம். ஆர். பீ. பெர்ஞன்டோ
எம். ஜே. பெரேரா
டபிள்யூ. பீ. எம். லோவ்
பி. எம். எல். ஆர் பண்டார
செல்வி. அ. அந்தனி
அருட்செல்வி. எம். வில்மா. அ. கா.
உ. நவரத்தினம்
கே ஏ. சி. டி. குணத்திலக

படங்கள் :
ரி. எல். பெரேரா
கே. ஏ. சி. டி. குணத்திலக

தளக் கோலம் : ஏ. சிவராஜா

மேற்பார்வை :
கே. எ. பியதிஸ்ஸ
ஆர். பி. எ. ஜயசேகர

பணிப்பு : கலாநிதி எஸ். டி. லயனல் அமரகுணசேகர

# திருச்சபைச் சரித்திரம்

தொலைக்கல்வி நிறுவகம்
தேசியக்கல்வி நிறுவகம்

| | |
|---|---|
| கிறிஸ்தவம் | 1218 |
| திருச்சபைச் சரித்திரம் | 121809 |

உள்ளடக்கம் — பக்கம்


0.0 அறிமுகம் ............ 3

1.0 குறிக்கோள்கள் ............ 3

2.0 முற்சோதனை ............ 4

பகுதி I

3.0 திருச்சபையின் ஆரம்ப யுகம் ............ 6

பகுதி II

4.0 கிறிஸ்தவ சபையின் மத்திய யுகம் ............ 14

பகுதி III

5.0 கிறிஸ்தவ சபையின் நவீன யுகம் ............ 21

பகுதி IV

6.0 இலங்கைத் திருச்சபையின் சரித்திரம் ............ 28

7.0 பொழிப்பு ............ 37

8.0 பிற்சோதனை ............ 38

9.0 ஒப்படை ............ 42

10.0 விடைகள் ............ 42

11.0 பின்னிணைப்பு ............ 43



(C) 1990-தேசியக் கல்வி நிறுவகம்



பதிப்பு 1:1

## 0.0 அறிமுகம்

- கிறிஸ்தவ சபையின் ஆரம்பத்தையும் அதன் கூட்டு ஐக்கியத்தையும், செயல் முறையையும் கிறிஸ்து யேசுவின் சபை என்னும் மாதிரி மூலமாக நீர் கற்றுள்ளீர்.

- கிறிஸ்தவ சபையானது ஒரு சிறு குழுவினுலேயே ஆரம்பமானது என்பதை நீர் நன்கு அறிவீர். ஜெருசலேமில் ஆரம்பமான இந்தத் திருச்சபை உரோம் வரை பரவி இன்று உலகம் முழுவதிலும் செயற்பட்டுவருகின்றது. இந்த நீண்ட பயணத்தில் திருச்சபை பல சவால்களை எதிர்நோக்கியது. அந்தச் சவால்களுக்கு அடிப்படையாக அமைந்த காரணங்களையும் அதன் பிரதிபலன்களையும் இப்பொழுது நோக்குவோம்.

- சரித்திர நிபுணர்களின் கணிப்பீட்டின்படி திருச்சபையின் ஆரம்ப ஐந்து நூற்றுண்டுகளையும் திருச்சபையின் ஆரம்ப காலம் என்கின்ருேம்.

- ஐரோப்பாவை ஆக்கிரமிப்பு செய்த மிலேச்சர்கள் கிறிஸ்தவ மதத்தைத் தழுவியதுடன் திருச்சபை மேல், கீழ் நாடுகளிலெல்லாம் பரவியது. இந்த யுகத்தினை (6 தொடக்கம் 15 ஆம் நூற்றுண்டு வரையான காலம்) மத்திய காலம் என்பர்.

- 15 ஆம் நூற்றுண்டின் ஆரம்பத்திலிருந்து உலகம் முழுவதிலும் பரவலாக அப்போஸ்தலிக்க பணி தொடர்ந்த காலத்தை (நூதன) நவீன யுகம் என்பர்.

அடுத்து நாம் இலங்கைத் திருச்சபை வரலாற்றை நோக்குவோம், கிறிஸ்தவ ஆசிரியராகிய நீங்கள், உங்கள் கடமைகளைச் சிறந்த முறையில் ஆற்றுவதற்கு இக்கருத்துக்கள் மிகவும் உதவியாகும் என நம்புகின்ருேம். இந்தப் பின்னணியில் நாம் திருச்சபை சரித்திரத்தைக் கற்பதனுல் கீழ்வரும் நோக்கங்களை இலகுவில் புரிந்து கொள்ளலாம்.

## 1.0 குறிக்கோள்கள்

★ இறைவனின் திட்டப்படி, மனித சரித்திரத்தில் செயலாற்றும் கிறிஸ்தவ சபை அல்லது இறை மக்கள் பரவல், சம்பந்தமாக அறிவைப் பெறுதல்.

★ சபை பரவுவதற்குத் துணைபுரிந்த காரணங்களை அறிதல்.

★ கிறிஸ்தவ சபை எதிர்நோக்கிய சவால்கள், அதற்கான காரணங்கள், திருச்சபை அதற்கு முகங்கொடுத்த விதம் என்பவற்றை அறிவது.

★ திருச்சபையினுள் ஏற்பட்ட பலவிதமான மாற்றங்களை விளங்கிக்கொள்வது.

★ மனித நலனைக்கருதி திருச்சபையாற்றிய பணிகளைப் புரிந்து கொள்வது.

★ கடந்த சம்பவங்களின் அனுபவங்களைத் துணையாகக்கொண்டு திருச்சபையினுள் காணக்கூடிய குறைபாடுகளைக் கருணையுடன் கண் நோக்குகுவது.

★ உலகில் திருச்சபையைக் கட்டியெழுப்புவதில் எனது பங்களிப்பு யாது என்னும் சிந்தனையை உருவாக்கிக்கொள்வது

★ திருச்சபை சரித்திரத்தை ஆழமாகக் கற்பதற்கு ஊக்குவித்தல்

★ கிறிஸ்தவ சபையின் வளர்ச்சிககு உதவுதல்.

மேற்கூறப்பட்ட இந்த குறிக்கோள்களை அடைவதற்கு உதவியான ஆதாரங்களைக் கற்பதற்கு முற்சோதனை ஒன்றுக்கு உங்களை அழைத்துச் செல்ல விரும்புகின்றோம்.

## 2.0 முற்சோதனை

மிகவும் பொருத்தமான விடையின்கீழ் கோடிடுக.

1 கிறிஸ்தவ சபை உலகினுள் கண்ணுக்குப் புலனாகும் முறையில் செயற்பட ஆரம்பித்தது; யேசுக்கிறிஸ்து:-

i கடைசி இராப்போசனம் உண்ட தினம்.
ii மரித்தோரிடமிருந்து உயிர்த்த தினம்.
iii வாக்களித்தபடி தூய ஆவியானவரை அனுப்பிய தினம்.
iv விண்ணகம் சென்ற தினம்.

2 யேசுக் கிறிஸ்துவினால் நமது சபையின் தலைவராக நியமிக்கப்பட்டவர்..:-

i சின்னப்பர்.
ii அருளப்பர்.
iii யாகப்பர்.
iv இராயப்பர்.

3 கிறிஸ்தவ திருச்சபை ஆரம்பமானது.

i மத்திய கிழக்கில்
ii தூர கிழக்கில்
iii மேற்கில்
iv கிழக்கில்

4 ஜெருசலேமின் அழிவிற்குப் பின்பு கிறிஸ்தவ சபையின் நடுநிலையம்,

i ஏதென்ஸ்
ii உரோம்
iii எபேசு
iv கொரிந்தி

ஆகியது,

5 கிறிஸ்தவ சபை மேல், கீழ் நாடுகளிலெல்லாம் கூடுதலாகப் பரவியது.

i ஆபிரிக்கா
ii ஆசியா
iii அமெரிக்கா
iv ஐரோப்பா

ஆகும்.

6 உரோமன் கத்தோலிக்க சமயத்தை இலங்கைக்கு கொண்டு வந்தவர்:-

i கிரேக்கர்.
ii போர்த்துக்கேயர்.
iii ஒல்லாந்தர்.
iv ஆங்கிலேயர்.

7 இலங்கையின் முதலாவது கத்தோலிக்க அரசன்:-

i கரலியத்தே பண்டார.
ii விமல தர்ம சூரியன்.
iii தொன்யுவான் தர்மபால.
iv 2ஆம் இராஜசிங்கம்.

8 இலங்கையில் வேறுபட்ட கிறிஸ்தவ சபைகளுக்கு பாடசாலைகளை நடத்தும் சுதந்திரம் கிடைத்தது.

i சிங்கள ஆட்சிக் காலத்தில்.
ii போர்த்துக்கேய ஆட்சிக் காலத்தில்.
iii ஒல்லாந்த ஆட்சிக் காலத்தில்.
iv பிரித்தானிய ஆட்சிக் காலத்தில்

உங்கள் விடைகளை மொடியூலின் இறுதியில் உள்ள விடைகளுடன் ஒப்பிடுக.

முற்சோதனையை எதிர்நோக்கிய உங்களை திருச்சபையின் ஆரம்ப யுகத்திற்கு அழைத்துச் செல்கின்றோம்.

## 3.0 திருச்சபையின் ஆரம்ப யுகம்

பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்மீது வந்திறங்கிய ஞாயிறு தினமே கிறிஸ்தவ சபையின் உத்தியோகபூர்வ பிறப்புத் தினம் என்பதை முன்னர் அறிந்தீர்கள். அன்று பல நாடுகளிலிருந்தும் மக்கள் ஜெருசலேம் தேவாலயத்தில் ஒன்று கூடினர். அவ்வேளை புனித இராயப்பரின் போதனையால் ஏறக்குறைய 3000 பேர் கிறிஸ்தவ சபையில் சேர்ந்து கொண்டனர் என்று அப்போஸ்தலர் பணி கூறுகின்றது. (அப்பணி 2:41) தொடர்ந்து அதில் மேலும் 5000 பேர் கிறிஸ்தவ சபையைத் தழுவிக் கொண்டார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது (அப் பணி 4:4)



ஆரம்பத்தில் யூத கிறிஸ்தவர்கள் ஜெருசலேம் தேவாலயத்திலேயே செபித்தனர். ஆனால் அங்கு நடைபெற்ற பலிகளில் பங்குபற்றாது வேறு தனியான ஓரிடத்தில் அப்பம், பிட்டு உண்ணும் வழிபாட்டை (நற்கருணை வழிபாடு) நடத்திவந்தனர். அத்தோடு தமது உடைமைகளையெல்லாம் பொதுவெனக் கருதி அப்போஸ்தலரிடம் அதைக் கையளித்து, கிறிஸ்துவுக்கு சான்று பகர்ந்து வாழ்தலைத் தமது நோக்கமாகக் கொண்டிருந்தனர்.

யூத மதத்தின் ஒரு பிரிவாகக் கருதப்பட்ட கிறிஸ்தவ சமயம், நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் போதனையின்படி வளர்ச்சி பெற்று வரும் புதிய ஓர் சமயம் என்பதை யூதத் தலைவர்கள் மிகவும் குறுகிய காலத்திலேயே விளங்கிக் கொண்டனர். இக் காலப்பகுதியில் கிறிஸ்தவ சமயத்திற்கு சான்று பகர்ந்த தியாக்கோனாகிய முடியப்பரின் மறைவுடன் ஜெருசலேமில் வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்கெதிராக கலாபனை ஆரம்பமாகியது. கிறிஸ்துவை எதிர்க்கும் நாட்டுத் தலைவர்களின் நன்மதிப்பையும் ஆதரவையும் பெறும் பொருட்டு யூத தேசாதிபதியான முதலாவது அக்றியா அரசன் (கி பி 41ல்) கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்றியவர்களைத் துன்புறுத்தினான். இதனால் கிறிஸ்தவர்கள் ஜெருசலேமை விட்டகன்று கலிலேயா, சமாரியா, சீரியா பிரதேசங்களை நோக்கிச் சென்றனர். இவர்களைத் தேடிக் கண்டு பிடித்து சிறைப்படுத்துவவற்காக யூதத் தலைவர்கள் திட்டம் ஒன்றைத் தீட்டி அதனைச் செயற்படுத்த, தார்சு நகரத்தவரான சவுல் என்பவரை நியமித்ததை நீங்கள் நன்கு அறிவீர்கள். அற்புதமான முறையில் மனமாற்றமடைந்த சவுல், திருமுழுக்குப் பெற்றுச் சின்னப்பர் என்னும் பெயருடன் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புவதில் முழுமூச்சுடன் ஈடுபட்டதை புதிய ஏற்பாட்டின் அப்போஸ்தலர் பணி கூறுகின்றது.

அந்தியோக்கியா, எபேசு, கொரிந்து ஆகிய இடங்களில் உருவாகிய கிறிஸ்தவ குழுக்களுக்கு நிருபங்கள், மடல்களை அனுபபி அச்சபையை வளர்ப்பதற்கு அயராது உழைத்தவர் இச் சின்னப்பரே அந்தியோக்கியாவிலேயே கிறிஸ்துவைப் பின்பறறிய மக்கள், முதன் முதலில் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட்டனர்.

## ஜெருசலேமிற்கு அப்பால் திருச்சபை பரவுதல்.



ஜெருசலேமிற்கு அப்பாற்பட்டப் பிரதேசங்களுக்குக்குச் சென்ற அப்போஸ்தலர்களிடம் யூதரலாத மக்கள் பலர் திருமுழுக்குப் பெற்று கிறிஸ்தவ சபையில் சேர்ந்தனர். இதனுல் புறவினத்தார் என்று அழைக்கப்பட்ட இவர்களின் எண்ணிக்கை கூடியதோடு சமயச்சடங்கு முறைகள் பற்றிய பிரச்சினைகளும் எழுந்தன.

ஜெருசலேமைச் சேர்ந்த கிறிஸ்தவ மதத்தைத் தழுவிய யூதர், புதிதாக கிறிஸ்தவ சமயத்தைத் தழுவிய புறவினத்தாரும், விருத்தசேதனம் பெற்று, மோயிசனின் கட்டளைகளை அனுசரிக்க வேண்டுமென்று கட்டாயப் படுத்தப்பட்டனர். ஆனுல் புறவினத்தாரோ ஆன்ம மீட்புக்கு யூத சமயத்தின் சடங்கு முறைகள் அவசியமில்லையெனக் கூறினர். இரு பகுதியினருக்குமிடையே யெழுந்த கருத்து வேறுபாட்டினை ஒரு முடிவுக்குக் கொண்டுவரும் பொருட்டு கி. பி. 51 இல் அப்போஸ்தலர்களின் ஆலோசனைக் குழு, யாகப்பரின் தலைமையின் கீழ் ஜெருசலேமில் ஒன்று கூடியபோது சீரியாவிலிருந்து சின்னப்பரும், அந்தியோக்கியாவிலிருந்து பர்ன பாசும் கலந்து கொண்டு, ஆன்மீக மீட்பிற்கு விருத்தசேதன சடங்கு முறையும், மோயிசனின் கட்டளைகளைப் பின்பற்றுவதும் அவசியமற்றது என்றும், திருமுழுக்கும், கிறிஸ்தவ வழிபாட்டு முறையும்போதுமானது என்றும் முடிவெடுக்கப்பட்டது.

ஜெருசலேமில் வாழ்ந்த, கிறிஸ்தவ சமயத்தைப் பின்பற்றிய யூத, எபிரேயரிற் சிலர் இம் முடிவை எதிர்த்தனர். ஆயினும் கி. பி. 70 ஆம் ஆண்டில் ஜெருசலேமின் அழிவுடன் யூத மக்கள் சிதறுண்டனர். சமய பொது நடுநிலையமாகிய தேவாலயம் அழிந்த பின்பு கிறிஸ்துவைப் பின்பற்றியவர்கள் சுதந்திரமான ஒரு சபையாக ஒன்றிணைந்ததை திருச்சபை சரித்திரம் எமக்கு எடுத்துக் காட்டுகிறது.

ஜெருசலேமிலிருந்து சீரியா வழியாக அந்தியோக்கியாவை வந்தடைந்த இராயப்பர் சில ஆண்டுகளின் பின் அங்கிருந்து வெளியேறி உரோமில் கிறிஸ்தவ சபையின் நடுநிலையத்தை உருவாக்கினுர்.

கி. பி. 44 ஆம் ஆண்டளவில் உரோமில், இவரே முதலாவது ஆயராகக் கடமையாற்றினுர். உரோமின் ஆயர் பாப்பிறை ஆவார் என்பது நீங்கள் அறிந்ததே. அதன்படி கிறிஸ்தவ சபையின் முதலாவது பாப்பிறை அப்போஸ்தவரான புனித இராயப்பர் ஆவார். ஆரம்ப காலத்தில் பிராந்திய கிறிஸ்தவ குழுக்கள் அனைத்தும் ஒன்றிணைந்து உரோமை ஆயரின் கட்டுப்பாட்டில் இருந்த இந்த ஒன்றியம் கத்தோலிக்க சபையென்று அழைக்கப்பட்டது.

## திருச்சபைக்கு ஏற்பட்ட கலாபனைகள்.



மத்திய கிழக்கிலிருந்து பரவிய கிறிஸ்தவ சபை; கல்ப் பிரதேசத்திலிருந்து அத்திலாந்திக் சமுத்திரத்திற்கும், வட ஆபிரிக்கா, தென்ஐரோப்பிய சமுத்திர கரையிலிருந்து உள்நாட்டிற்கும் பரவலாக இருந்த நிலப் பரப்பினைக் கொண்ட உரோமை சாம்ராஜ்யத்தில் பரவலாயிற்று. இந்தச் சமயத்தில் பலவகையான கலாபனைகள் சபைக்குச் சவாலாக இருந்ததை நீங்கள் அறிந்திருப்பீர்கள். இவைகளுக்கான காரணங்களை ஆராய்வது உங்களுக்குப் பயனளிக்குமென நம்புகின்றோம்.

உரோமை சாம்ராஜ்யமானது, மக்கள் தமக்கு முழுமையாகக் கீழ்ப்படிய வேண்டுமென்றும், இறைவனுகத் தன்னை வணங்க வேண்டுமென்றும் எதிர்பார்த்தது. தம்மைக் கடவுளாக ஏற்றுக் கொள்ளவும், உரோமைத் தேவதைகளுக்கு வணக்கம் செலுத்தவும், வெவ்வேறு சமயங்களை அனுசரிப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டது. ஆனல் கிறிஸ்தவ சபை இதனை ஏற்றுக்கொள்ளவில்லை கிறிஸ்தவர்கள் போர்ப்படையில் சேர்வதை எதிர்த்தனர். சமய வழிபாட்டிற்காக இரகசிய முறையில் ஒன்று கூடிய அவர்கள், இறையரசைப் பற்றியும் கலந்துரையாடினர். இதனல், அரசிற்கு எதிராக வேறொரு அரசை அமைப்பதற்கு முயற்சிக்கும் அரச துரோகிகள் என கணிக்கப்பட்டனர். யூத சமயத்தவர்களும் கிறிஸ்தவர்களுக்குப் பாதகமாகப் பொய்ச் சாட்சிகளைப் பரப்பினர். கிறிஸ்தவ வழிபாடு முறைகளினுல் தேவதைகளை வழிபடுபவர்களின் எண்ணிக்கை குறைந்து இ கோபத்தினுல் அரசிற்கு எதிர்ப்புக்களும், ஆபத்துக்களும் வருகின்றது என்று கோவிலில் வேலை செய்த வியாபாரிகள் சுயநலம் கருதி தமது கருத்தினை வெளியிட்டனர். இக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு கி. பி. 64 ஆம் ஆண்டு தொடக்கம் கி. பி. 305 வரையில் உரோமை சாம்ராஜ்ய ஆளுநர்கள் கிறிஸ்தவ சபையை அழிப்பதற்குக் கொடிய 10 கலாபனைகளை ஏற்படுத்தியதை சரித்திரம் கூறுகிறது.

இக் கலாபனையின்போது விசுவாசிகள் பலர் வீரத்துடன் தமது வாழ்வைப் பலியாக்கி வேதசாட்சிகளாயினர். கி. பி. 64-67 வரையான காலப்பகுதியில் நீரோ மன்னனின் கலாபனையின்போது இராயப்பரும், சின்னப்பரும் பலியாகினர். அத்தோடு இக்னேசியஸ், பொலிகாப், யஸ்டின், லோறன்ஸ், செபஸ்தியார் ஆகிய புனிதர்களும், சிசிலியா, ஆகத்தா, அக்கினேஸ், லூசியா ஆகிய புனிதைகளும் வேதசாட்சிகளாயினர்.

கலாபனையின்போது கிறிஸ்தவர்கள் சமய வழிபாடுகளை கடகடம் என்று அழைக்கப்படும் சுரங்கங்களில் நடத்தினூர்கள். பின்னர் அவை வேத சாட்சிகளை அடக்கம் செய்த கல்லறைகள் ஆகின கிறிஸ்தவ பக்தர்கள் தமது விசுவாசத்தின் நிமித்தம் வீரத்துடன் மரணத்தை எதிர் கொண்டனர். தூய ஆவியானவரால்

தாம் பலப்படுத்தப்படுவதையும், கிறிஸ்து தம்முள் உயிரோடு இருக்கிறார் என்பதையும் விசுவசித்தமை இதற்குக் காரணமாகும். அடிமையும், எசமானும் ஒரேவேளையில் சமயத்திற்காக வேத சாட்சிகளானதும், கிறிஸ்தவர்களின் வாழ்க்கை முன் மாதிரிகையும் அந்நியர்களைக் கவர்ந்தது கிறிஸ்துவின் இரண்டாம் வருகை பற்றிய எண்ணம் மக்கள் மனதில் ஆழமாகப் பதிந்தமையாலும் இயேசுகிறிஸ்து மீட்பர் என்று கல்விமான்கள் ஏற்றுக்கொண்டதாலும் கலாபனைகளையும் மீறி திருச்சபை வளர்ச்சியடைந்தது. ஆரம்ப காலத்தில் திருச்சபையின் நிலையான வளர்ச்சிக்கு மேற்கூறிய கலாபனைகள் காரணமாகியதை நீர் நன்கு அறிந்திருப்பீர் என எண்ணுகின்றேன். வேத சாட்சிகளின் இரத்தம் திருச்சபையின் வளர்ச்சிக்கு எவ்வாறு வித்தாகியது என்பது இதனால் உறுதிப்படுத்தப்படுகிறது.

**திருச்சபையின் தந்தையர்கள். (பிதாக்கள்)**

திருச்சபை கலாபனைகளை எதிர்நோக்கிய போதெல்லாம் காலத்திற்கேற்ற காப்புறுதி தத்துவ ஞானிகள் அல்லது அபொலஜிஸ்த என்று அழைக்கப்பட்ட எழுத்தாளர்கள் தோன்றினர். இவர்கள் கிறிஸ்தவ மதத்தை நன்கு விளக்கியுரைத்தல், யூத மதத்தவரின் பொய்க் குற்றச் சாட்டுகளுக்கு விடையளித்தல், கிறிஸ்தவர்களைத் துன்புறுத்துவதற்கு எதுவித காரணமும் இல்லையென்பதை சாம்ராஜ்ய ஆளுநர்களுக்கு எடுத்துக்காட்டுவதைத் தமது நோக்கமாகக் கொண்டிருந்தனர் பேட்றியன், ஜஸ்டின், இன்ஞெயியார் என்பவர்கள் இவ்வரிசையைச் சேர்ந்தவர்கள்.

திருச்சபை பரவிக்கொண்டிருக்கும் அதே வேளையில் பல்வேறு தத்துவங்களின் செல்வாக்கைப் பெற்ற கல்விமான்களும் திருச்சபையில் அங்கம் வகித்தனர். அவர்கள் தமது தத்துவ சிந்தனைகளுக்கேற்ப கிறிஸ்தவ மதத்தை விளக்கினர் என்பது தெளிவாகின்றது. இவர்கள் இரண்டு பிரிவினர். கிறிஸ்தவ சமயத்தின் ஆழமான உண்மைகளை உரிய முறையில் விளக்குவதற்கு முயற்சி செய்தவர்கள் முதற்பிரிவினர். இவர்களின் பயனாக உண்மைக்குச் சான்று பகரும் சமயம் வளர்ச்சியடைந்தது. தாங்கள் பெற்ற தத்துவச் செல்வாக்கிற்கிணங்க கிறிஸ்தவ சமயத்தை தப்பான வழிகளில் இட்டுச் செல்ல முயன்றவர்கள் இரண்டாம் பிரிவினர். சிலருக்கு மட்டும் கிடைக்கும் ஞானம் தமக்குள்ளது என்று கூறிய நொஸ்டிக் அல்லது மனிக்வாதி, கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைத் தாம் அறிவர் என்று கூறிய மொனுஸ்தனீஸ் வாதி என்போர் இப்பிரிவைச் சேர்ந்தவர்கள்.

இவர்களின் இவ்வாதங்கள் கிறிஸ்தவ சமயத்தைப் பிழையின்றி விளக்குவதற்கு முன்வந்த சமய எழுத்தாளர் பரம்பரையை இரண்டாம், மூன்றும் நூற்றுண்டுகளில் உருவாக்குவதற்கு உதவியது. இச்சமயச் தேர்ச்சியாளர்களின் செயல்களின் பயனாக கார்தேஜ், அந்தி

யோக்கியா, அலெக்சாந்திரியா, உரோமை என்னும் நகரங்களில் கிறிஸ்தவ மறைக்கல்விப் பீடங்கள் உருவாகின. ஆரம்ப காலத்து இக்கல்விப் பீடங்களுள் அலெக்சாந்திரிய கல்விப்பீடம் முதலிடத்தை வகிக்கிறது. இங்கு அபொலொஜிஸ் எழுத்தாளர்களினால் கிறிஸ்தவ மறையை விளக்குவதற்கு எடுக்கப்பட்ட முயற்சி பயன் அளித்தது. கிறிஸ்தவ இறையியல் இக்காலப் பகுதியில் வளர்ச்சியடைந்ததுவும் ஒரு முக்கியமான அம்சமாகும். அதற்காக உழைத்த கல்விமான்கள் சபையின் தந்தையர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். அவர்களில் சிலர் கிரேக்க செல்வாக்கையும் ஏனையோர் இலத்தீன் செல்வாக்கையும் பெற்றிருந்தனர். இக்காலப் பகுதியில் ஆசியா, சீரியா, அலெக்சாந்திரியாவைச் சேர்ந்த பகுதிகள் அந்தியோக்கியாவை நடுநிலையமாகக் கொண்டதுடன் கிறிஸ்தவ சபையின் கீழ்நாடுகள், கிரேக்க சம்பிரதாயத்தைத் தழுவியது. உரோமையைத் தலைநகராகக் கொண்ட மேல் நாடுகள் இலத்தீன் சம்பிரதாயத்தைத் தழுவின

கிரேக்க செல்வாக்கைப் பெற்ற கீழ்நாட்டு சபைப் பிதாக்களுள் அயிரேசியஸ், ஒரிகன், பசில், யோன்கிளொஸ்தம் ஆகிய சமயத் தேர்ச்சியாளர்களை விசேடமாகக் குறிப்பிடலாம் ஜெரோம், அம்புரோஸ், தெர்த்தூலியன், கிளரி, கிப்போகு அகஸ்ரின் ஆகியோர் பிரசித்தி பெற்ற இலத்தீன் செல்வாக்கைப் பெற்ற மேல்நாட்டு பிதாக்களாவர். மேற்கூறிய இவர்கள் யாவரும் கிறிஸ்தவ எழுததுத் துறையின் சுதந்திரமான வளர்ச்சிக்கு உன்னதமான பங்களிப்புச் செய்திருப்பதைப் பாராட்ட வேண்டும்.

இக்காலப் பகுதியில் இன்னுமொரு விசேட நிகழ்ச்சியும் நடைபெற்றது. அதாவது பாஸ்கா விழாவைக் கொண்டாடிய தினத்தைப்பற்றி, மேல்நாடுகள், கீழ்நாடுகளிடையே காணப்பட்ட கருத்து வேற்றுமையாகும். பாஸ்காக் கலவரம் 50 வருடங்களுக்குப் பின்பு சமாதான முறையில் முடிவுற்றது.

### திருச்சபைக்கு சுதந்திரம்

கி. பி. 313 ஆம் ஆண்டில் உரோமைச் சாம்ராஜ்யத்தின் அரசனை கொன்ஸ்தாந்தின் வெளியிட்ட மிலான் சாசனத்தின்படி கிறிஸ்தவ சபைக்கு சுதந்திரம் கொடுக்கப்பட்டதுடன் 300 ஆண்டு காலமாக நடைபெற்ற சமயக் கலாபலனையும் முடிவுற்றது. அத்தோடு இச்சபைக்கு உரோமை அரசனின் உதவியும் கிடைத்தது. இதனல் பகிரங்க வழிபாட்டினை நடத்தும் பொருட்டு தேவாலயங்கள் எழுப்பப்பட்டன. உரோமையிலும், கொன்ஸ்தாந்திநோபலிலும் பசிலிக்கா தேவாலயமும் இதற்குச் சிறந்த சான்றுகளாகும்.

கொன்ஸ்தாந்தினுடைய ஆட்சியின் பின்னர் உரோமையும் ஆசியாவில் கொன்ஸ்தாந்திநோபிலும் தலைநகராகப் பெயரிடப்பட்டதாக சரித்திரம் கூறுகிறது இதன் பயனாக உரோமையைத் தலைநகராகக்கொண்ட மேற்கு சாம்ராஜ்யமும், கொன்ஸ்தாந்திநோபிலைத் தலைநக



ராகக் கொண்ட கிழக்கு சாம்ராஜ்யமும் உருவாகியது. இவை முக்கியத்துவமடைந்த இரு பிரிவுகளாகும். கிறிஸ்தவ சபை மேற்கில் இலத்தீன் மொழியும், கிழக்கில் கிரேக்க மொழியும் என இரண்டு சம்பிரதாயங்களாக விளங்கின. மேற்குப் பகுதி பாப்பிறையின் தலைமையிலும், கிழக்குப்பகுதி பேட்ரிமாக் என்னும் மேற்றிராணியாரின் தலைமையிலும் செயலாற்றியது. இருப்பினும் சபையின் போதனைகள் முடிவுகள் யாவும் பாப்பிறையின் தலைமையிலேயே நிகழ்ந்தன.

சமயச் சுதந்திரம் பெற்று திருச்சபை பல திசைகளிலும் பரவியதால் அதனுள் உலக நாட்டங்கள் வந்து புகுந்தன. இதனல் இக்காலப் பகுதியில் வேதசாட்சிகள் யாரும் தோன்றவில்லை. ஆகையால் பக்தர்கள் துறவற வாழ்க்கை மீது தமது கவனத்தைச் செலுத்தினர்.

துறவற சபைகள் முறையாக ஒழுங்கு செய்யப்பட்ட நகர வாழ்க்கையை ஒத்தவையாக இக்காலத்தில் அமைந்து விளங்கின. பெரிய அந்தோனியார், பகோமியஸ், பசில் ஆகிய புனிதர்கள் முறையான துறவற வாழ்க்கை முறையை அமைப்பதில் முயற்சியுடன் செயற்பட்டனர். கிறிஸ்தவ சபையின் ஆன்மீக வாழ்வைப் பாதுகாப்பதற்கும், பல நூற்றாண்டுகளாகக் கல்வியை நிலை நிறுத்தவும் தப வாழ்க்கை முறை உதவியது என்பது கல்விமான்களின் கருத்தாகும்.

கிறிஸ்தவ சமயத்திற்கு அரச செல்வாக்குக் கிடைத்த பின்பு திருச்சபையின் நிலைபற்றி ஆராய்வோம்.

சமயத் தலைவராக அரசினல் நியமிக்கப்பட்ட உரோமை அரசனை ஏற்பது பாரம்பரியமாக விளங்கிய போதிலும் கிறிஸ்தவ சமய முறைப்படி சமய தலைமைத்துவத்தை அரசனுக்கு வழங்குவதை கிறிஸ்தவ சபை ஒருபோதும் அனுமதிக்கவில்லை. அரசனுக்கு சமயத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு மட்டுமே வழங்கப்பட்டது. இதனல் காலப்போக்கில் திருச்சபைக்கும், அரசனுக்குமிடையில் தகராறு ஏற்பட்டதை நாம் மறக்க முடியாது. திருச்சபையினுள் சமயத்திற்கு எதிரான பேதங்கள் தோன்றியபோது திருச்சபைக்கு சார்பான, எதிரான இரு சாராரின் ஒத்துழைப்பும் அரசனுக்குத் தேவைப்பட்டது. ஆகையால் பேதங்கள் பரவிய பல சந்தர்ப்பங்களில் அரசனிடமிருந்து அவற்றிற்குத் தடைகள் ஏற்படவில்லை

## சபையினுள் சமய எதிர்ப்புப் போதனைகள்.

சுதந்திரம் பெற்ற கிறிஸ்தவ சபையினுள், சமயத்திற்கு எதிரான பல போதனைகள் பரவியது. இயேசுகிறிஸ்து கடவுள் அல்ல; உயர்ந்த படைப்பாவார் என்று அலெக்சாந்திரியா நாட்டுக்குரவரான ஒரியஸ் கற்பித்தார். இது ஒரியஸ் பேதகம் என்று அழைக்கப்பட்டது. இது கி. பி. 320 ஆம் ஆண்டு நிசேயர் பட்டணத்தில் நடை

பெற்ற 1 ஆவது சங்கத்திலும் கி.பி. 381இல் கொன்ஸ் தாந்திநோபிலில் நடைபெற்ற 2 ஆவது சங்கத்திலும் நிராகரிக்கப்பட்டது.

இறைவன் மனிதன் என்ற இரு ஆட்களாக இயேசு கிறிஸ்து இருக்கின்றார் என்றும், மரியாள் இறைவனின் தாய் அல்ல என்றும் கொன்ஸ்தாந்திநோபிலின் மேற்றிராணியாரான நெஸ்தோரியஸ் செய்த போதனை நெஸ்தோரியஸ் பேதகம் என்றும் பிலேஜியஸ் என்னும் பிரித்தானிய குருவானவர் சென்ம பாவத்தைப் பாவத்தைப் பற்றி தவறான போதனைகளைச் செய்தார். இது பிலேஜியஸ் பேதக என்றும் அழைக்கப்பட்டது. இவ்விரு பேதகங்களும் கி பி. 431 இல் எபேசில் கூடிய சங்கத்தில் நிரர்கரிக்கப்பட்டன. இயேசு மனுவுருவாகியபோது அவரது இறைத்தன்மை குறைந்ததாக கொன்ஸ்தாந்திநோபில் தலைவனான எவ்ட்சியஸ் போதித்தார். இது எவ்ட்சியஸ் பேதகம் எனப்பட்டது. கி.பி. 451- இல் கல்சிடனில் ஒன்று கூடிய கூட்டத்தில் இப்பேதகம் நிராகரிக்கப்பட்டது.

நெஸ்தோரியன் பேதகம் பரவியபோது தியத்தோர், தியத்தொரட், அப்பாஸ் ஆகிய மூவர் தலைவரானார்கள். இப்பேதகம் கி.பி. 553 இல் கொன்ஸ்தாந்திநோபிலில் கூடிய சபையில் நிராகரிக்கப்பட்டது. இது இயேசு கிறிஸ்துவுக்குள் இறைசித்தம் மட்டும் உள்ளது என்பதை வலியுறுத்திய பேதகம் ஆகும். கி பி. 680 – 681 வரையான காலத்தில் கொன்ஸ்தாந்திநோபிலில் ஒன்று கூடிய 6 ஆவது கூட்டத்தில் நிராகரிக்கப்பட்டது.

இவை போன்ற கருத்துக்களை ஆராயும்போது உண்மையான சமயத்தை பாதுகாக்க திருச்சபை எப்போதும் விழிப்புடன் செயற்பட்டதை அறிய முடிகின்றது.

ஆரம்ப காலத்தில் இருந்து ஐந்தாம் நூற்றாண்டுக்குட்பட்ட கிறிஸ்தவ சபையின் சரித்திரத்தைக் கற்ற உங்களை பரீட்சைக்கு அழைத்துச் செல்கின்றோம்.

**செவ்வைபார்த்தல் 1**

**பொருத்தமான விடையின் கீழ் கீறிடுக**

(1) இராயப்பரின் போதனையைக் கேட்டு கிறிஸ்துவைப் பின்பற்றியவர்களைப் பற்றிக் கூறப்படுவது,

i மாற்கு நற்செய்தியில்
ii லூக்காஸ் நற்செய்தியில்
iii அப்போஸ்தவர் பணியில்
iv அருளப்பரின் திருவெளிப்பாடு நூலில்

(2) முதலாவது வேத சாட்சி

i இராயப்பர்
ii தோமஸ்
iii சின்னப்பர்
iv முடியப்பர்

(3) நற்செய்தியைப் புறவினத்தார் மத்தியில் கொண்டு செல்வதற்காக மிகவும் கடினமாக உழைத்தவர்.

i யாக்கோபு
ii சின்னப்பர்
iii அருளப்பர்
iv தியோப்பிளஸ்

(4) ஜெருசலேம் திருச்சங்கம் கூடியது,

i கிறிஸ்தவ சபைக்கு தலைவர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கு
ii கிறிஸ்தவ சபையின் தலைநகரைப் பற்றி முடிவு எடுப்பதற்காக.
iii கிறிஸ்தவ சபையையும் யூத சடங்கு முறைகளையும் பற்றி முடிவு எடுப்பதற்கு.
iv கிறிஸ்தவ சபைக்கு எதிரான கலாபனைகளைப் பற்றி ஆராய்வதற்கு.

(5) கொடிய 10 கலாபனைகள் கிறிஸ்தவ திருச்சபைக்கு ஏற்படுத்தப்பட்டது.

i உரோமை சாம்ராஜ்யத்துள்.
ii கிரேக்க சாம்ராஜ்யத்துள்.
iii பபிலோனிய சாம்ராஜ்யத்துள்.
iv துருக்கி சாம்ராஜ்யத்துள்.

(6) உரோமை அரசர்கள் சபைக்கு எதிராக நடத்தும் கலாபனைகள் நியாயமற்றவை என்று விளக்கியது.

i நொஸ்டிக்.
ii மனிக்கி.
iii அப்பொலொஜிஸ்.
iv சபைப் பிதாக்கள்

(7) சபையில் கிழக்கு, மேற்கு பகுதிகளில் ஏற்பட்ட பாஸ்கா பேதம்,

i பாஸ்காக் காலத்தில் சடங்கு முறைகளைப் பற்றிய கருத்துப் பேதங்களாகும்.
ii பாஸ்கா விழாவைக் கொண்டாடும் நாளைப் பற்றிய கருத்துப் பேதங்களாகும்.
iii பாஸ்கா சமயத்தில் விழாக் கொண்டாடுவதைப் பற்றிய கருத்துப் பேதங்களாகும்.
iv பாஸ்காக் காலத்தைச் சார்ந்த நாட்களைப் பற்றிய கருத்துப் பேதமாகும்.

(8) உரோமை சாம்ராஜ்யத்துள் திருச்சபைக்கு முழுச் சுதந்திரம் வழங்கிய அரசன்,

i ஜஸ்டினியன்.
ii குளோவிஸ்.
iii சாலமோன்.
iv கொன்ஸ்தாந்தின்.

(9) நிசேயாவில் நடைபெற்ற 1ஆவது சங்கத்தாலும் கொன்ஸ்தாந்திநோபிலில் நடைபெற்ற 2 ஆவது சங்கத்தாலும் நிராகரிக்கப்பட்ட பேதகம்,

i நெஸ்டோரிம்ன்.
ii ஒரியன்.
iii பிலேஜியன்.
iv எயூட்சியன்.

(10) நெஸ்டோரியனல் ஏற்படுத்தப்பட்ட பேதகம்,

i இயேசுகிறிஸ்து இறைவன் அல்ல என்பதாகும்
ii மனுவுருவாகியபோது இயேசுகிறிஸ்துவின் இறை சுபாவம் குறைந்ததாகும்.
iii இயேசுவுக்குள் இறைசித்தம் மட்டும் உண்டு. இயேசுவுக்குள் இறைவன், மனிதன் என்னும் இரு ஆட்கள் உண்டு.

(11) கலாபனைக் காலத்தில் கடரும்பு பாவிக்கப்பட்டது

i கிறிஸ்தவ ஏடுகளைப் பாதுகாப்பதற்காக.
ii கிறிஸ்தவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டு களைப் பரிசீலனை செய்வதற்காக.
iii கிறிஸ்தவ சமய வழிபாடுகளுக்காக.
iv கிறிஸ்தவர்களைத் துன்புறுத்துவதற்காக.

(12) உவக நாட்டங் கொண்ட சபையின் ஆன்மீக ஆன்மீக வாழ்க்கையைப் பாதுகாப்பதற்கு உதவியது,

i தபசு வாழ்க்கை முறையாகும்.
ii வேத சாட்சிகளின் வாழ்க்கை முறையாகும்.
iii அரசனின் சமய பாதுகாப்பு ஆளுமையாகும்.
iv சபைத் தலைவர்களின் போதனையாகும்.

உங்கள் விடைகளை மொடியூலின் இறுதியில் உள்ள விடைகளுடன் ஒப்பிடுக.

பகுதி ii

## 4.0 கிறிஸ்தவ சபையின் மத்திய யுகம்

(6 ஆம் நூற்றூண்டு தொடக்கம் 15 ஆம் நூற்றூண்டு வரை)

- உரோமை அரசின் வீழ்ச்சி.
- அரேபியரின் ஆட்சி.
- சிலுவை யுத்தமும் திருச்சபையின் பிரதி நடவடிக்கைகளும்.
- துறவற சபைகளுள் ஏற்பட்ட சீர்திருத்தங்களும் ஆன்மீக வளர்ச்சியும்.

## ஐரோப்பிய நாகரிகத்தின் வளர்ச்சி

5 ஆம் நூற்றூண்டில் உரோமை சாம்ராஜ்யம் வீழ்ச்சி யடைய ஆரம்பித்ததும் ஐரோப்பாவில் வசித்த விசிக் கோத்பிரான்க், லொம்பார்ட் ஒஸ்ரோகோத், உறன்வே என்னும் மிலேச்ச இனங்களின் ஆக்கிரமிப்புக்கு உரோமை சாம்ராஜ்யம் இலக்காகியது. 496 ஆம் ஆண்டில் சாம்ராஜ்சியத்தின் மேற்குத் திசையின் கோல் பிரதேசத்தை ஆட்சிபுரிந்த பிரான்க் இனததவரின் தலைவனுன குளோவின் கிறிஸ்தவ மதத்தைத் தழுவினுன். பின்னர் அந்தக் குலத்தைச் சேர்ந்த சாலமோன் (முதலாம் சார்ள்ஸ்) அரசன் உரோமைக்குச் சொந்தமான பிரதேசத்தின் அரசனுக முடிசூட்டப்பட்டான். இவ்வரசன் இக்காலத்தில் பிரதேச ஆட்சி முறையைக் கொண்ட இப்பிரதேசத்திற்கு பரிசுத்த உரோமை சாம்ராஜ்யம் என்று பெயரிட்டு கிறிஸ்தவ மதத்தையும் அரச மதமாகப் பிரகடனப்படுத்தினுன்.

உரோமை அரசின் வீழ்ச்சியோடு கிறிஸ்தவ சபைக்குப் பொறுப்பும், அதிகாரமும் கிடைத்தது. கிறிஸ்தவ சபை மிலேச்சர்களுக்கு கிறிஸ்தவ சமயத்தைப் போதித்து அவர்களைப் பண்புள்ளவர்களாக்கியது. உரோமையில் பரவி வாழ்ந்த கிறிஸ்தவர்களை நல்வழிப்படுத்தியது. இக்காலத்தில் சமய அரசியல் அதிகாரம் மேலோங்கியது இதன் காரணமாக அரசர்கள் திருத்தந்தையர்களுக்கு இடையில் மோதல் உண்டாயிற்று. அரசர்கள் சமய ஆட்சியிலும், சமயத்தலைவர்கள் அரசியல் ஆட்சியிலும் ஈடுபட்டது. இதன் காரணமாக திருச்சபைக்குள்ளும் சொத்துக்களை உரிமையாக்கும் தன்மை ஏற்பட்டது. சபையின் சில தலைவர்கள் இலௌகீகத்தை நாடியதன் காரணமாக ஆன்மீக வளர்ச்சியில் குன்றிப் போயினர்

## சிலுவையுத்தம்

கிறிஸ்தவ சபையின் ஆன்மீக வாழ்வு குன்றிய இக்கால பகுதியில் திருச்சபை பல துன்புறுத்தல்களுக்கு ஆளாகியது. அவற்றைப் பற்றி இப்பொழுது நோக்குவோம்.



அரேபிய கோத்திரத்தைச் சேர்ந்த மக்கள் பர்சியா துருக்கி, பலஸ்தீனு ஆகிய நாடுகளை வெற்றி கொண்டு உரோமை சாம்ராஜ்சியத்திற்குச் சொந்தமான மத்திய தரைக்கடலோர ஆபிரிக்கா, ஸ்பெயின் ஆகிய நாடுகளை ஆக்கிரமித்ததாகச் சரித்திரம் கூறுகிறது. அவர்கள் கைப்பற்றிய நாடுகளில் இஸ்லாம் மதத்தைப் பரப்புவதே அவர்களின் குறிக்கோளாகியது. இதை கிறிஸ்தவ சபை எதிர்த்தது. இதற்கிடையில் அரேபிய மக்களைத் தோல்வியுறச் செய்து ஆட்சியைக் கைப்பற்றிய ஒடோமன் என்பவர் துருக்கிய சாம்ராஜ்யத்திற்கு பலஸ்தீனுவைச் சொந்தமாக்கினுர். இது கிறிஸ்தவ சபை எதிர்கொண்ட இன்னுமொரு சவாலாகும். எனவே 1096 ஆம் ஆண்டில் கிறிஸ்தவர்கள் தமது பரிசுத்த பூமியின் விடுதலைக்காகப் போர்புரியத் துணிந்தனர். துருக்கியரின் ஆட்சியிலிருந்து பலஸ்தீனுவை மீண்டும் பெறுவதன்

நோக்கத்துடன் பரிசுத்த உரோமை சாம்ராஜ்ய அரசர்கள் சபைத்தலைவர்களின் அனுமதியுடன் ஆரம்பித்த போரே சிலுவை யுத்தம் எனப்பட்டது. இராயப்பர் சிலுவையைக் காட்டி கிறிஸ்துவை அடக்கம் செய்த நாட்டைக் கைப்பற்றும் நோக்கத்துடன் கிறிஸ்தவர்களைப் போதனைகளுக்கூடாக ஒன்று சேர்த்த காரணத்தினாலும் சிலுவை அடையாளத்தை அணிந்து கொண்டு கிறிஸ்தவர்கள் போரில் பங்கு கொண்டதனாலும் சிலுவைப் போர் என்ற பெயர் இடப்பட்டது என்பது பொதுவான கருத்தாகும். சபையின் மத்திய யுகத்தில் 7 சிலுவைப்போர்கள் இடம் பெற்றதாக சரித்திரம் கூறுகிறது.

ஆரம்பத்தில் கிறிஸ்தவ படைகளுக்குப் பரிசுத்த பூமியின் சில மதத் தலங்களைக் கைப்பற்ற முடிந்தது, இருப்பினும் இறுதியில் அவையனைத்தும் துருக்கிய படைகளினால் கைப்பற்றப்பட்டன. இதன்படி 1291 இல் சிலுவைப்போர் அனைத்தும் முடிவு பெற்றது. இப்போரின் குறிக்கோளை அடைய முடியாவிடினும் அதனால் சில நற்பயன்களும் உண்டாகியதை மறக்க முடியாது. பொதுவான நோக்கத்துடன் ஒன்று சேரும் சமூக பலத்தையும் அங்கத்தவர்களின் ஒற்றுமையின் குறிக்கோளையும், சிலுவைப்போர் வீரர்களுள் காணப்பட்ட ஆன்மீக தூண்டுதல்கள் அவர்கள் சமய வளர்ச்சிக்குத் துணை புரிந்ததையும் நற்பலன்களாகக் கொள்ளலாம்.

**கீழ் நாட்டுப் பிரிவினை**

வெளி ஆக்கிரமிப்புக்கள், எதிர்ப்புக்கள், கிறிஸ்தவ சபையைத் தாக்கிய வேளையில் சபையினுள் எழுந்த கீழ்நாட்டுப் பிரிவினைகள் மீது இப்போது எமது கவனத்தைச் செலுத்துவோம்.

அரசியல் நோக்குடன் ஒன்றிணைந்த உரோமைசாம்ராஜ்யத்தில் கிறிஸ்தன் சபையின் கிரேக்க சம்பிரதாயத்தை ஒத்த கீழ்நாட்டுப் பிரதேசமும், இலத்தின் சம்பிரதாயத்தின் மேல் நாட்டுப் பிரதேசமும் முதல் நூற்றாண்டுகளில் ஒற்றுமையாக இருந்தன ஆயினும் உரோமையைப் போலவே கொன்ஸ்தாந்திநோபிலும் தலைநகரமாகிய பின்னர் கிரேக்க இலத்தீன் பிரதேசங்களில் ஆட்சி புரிவது சம்பந்தமான போட்டி உருவாகிற்று. திருவழிபாடு பற்றி மாறான கருத்துக்கள் வெளியாயின. திருவழிபாடு பற்றிய கேள்வியுடன் போட்டி மனப்பான்மை கூடியது. திருப்பலிக்குப் புளியாத அப்பம் பாவிக்க வேண்டுமென இலத்தீன் மொழி பேசுவோர் வற்புறுத்தினர்கள். கிரேக்கர் புளிப்புக் கலந்த அப்பம் பாவிக்க வேண்டுமென்று வற்புறுத்தினர்கள். இது சபையின் தலைமைத்துவத்தை வகிப்பது பற்றி பிரிவினைக்கு இடமளித்தது. 1054 ஆம் ஆண்டில் திருச்சபை கிரேக்க இலத்தீன் என இரு சுதந்திரப் பிரிவுகளாக செயலாற்றத் தொடங்கின. 1965 ஆம் ஆண்டில் பிரிவினைகளை அகற்றும் செயற்றிட்டம் மேற்கொள்ளப்பட்டது. இலத்தீன் சபையின் பரிசுத்த தந்தையும் கிரேக்க

சபையின் தலைவர் பேற்ரியாக்கும் பரிசுத்த பூமியான ஜெருசலேமில் சந்தித்து சமாதானத்தைப் பரிமாறிக் கொண்டதன் பயனாக கீழ்நாட்டு கிரேக்க சபை கிரேக்க ஓதொடொக்ஸ் சபை என்று பிரசித்தம் பெற்றது.

இக்காலப் பகுதியில் இலத்தீன் சபை கருத்து வேறுபாடுகளுடன் கிறிஸ்தவ போதனைகள் சிலவற்றைப் போதித்தது.

- உலகமும் படைப்புக்கள் அனைத்தும்.
- திருமணமும் குழந்தை பிரசவமும். பாவம் என்று அல்பிஜோன்சன் பேதகர்கள் பிரான்சு தேசத்தில் போதித்தது.
- கிறிஸ்தவ விசுவாசம் எல்லோருக்கும் ஒன்றே என்று பரிசுத்த வேதாகமம் கூறுகிறது
- திவ்விய நற்கருணை எழுந்தேற்றத்தின் போது நற்கருணையில் யேசுக்கிறிஸ்து மெய்யாகவே எழுந்தருளி யிருப்பதில்லை.

என்ற கருத்தையும் இங்கிலாந்தில் விக்ரிப் பேதகம் போதித்தது. போஷியாவில் சித்த ஷஸ் என்பவர்கள் ஐரோப்பா முழுவதிலும் விக்ரிப் பேதக கருத்துக்களைப் பரப்பினர். கிறிஸ்தவ சபை தலைவர்கள் இவை சரி யென்று விளக்கம் கூறினர்.

**துறவற வாழ்க்கை:-**

மேற் கூறப்பட்ட காரணங்களையிட்டு கிறிஸ்தவ சபையின் வளர்ச்சி குன்றியதால் அதன் முன்னேற்றத்தைக் கருதியே துறவற சபை ஆரம்பிக்கப்பட்டது, அதன் பணிகள் பற்றி இப்பொழுது நோக்குவோம்.



பிரான்ஸ் நாட்டுப் புனித மாட்டின் என்பவரே ஐரோப்பாவில் துறவற சபையின் ஆரம்ப கர்த்தா ஆவார். அவரது துறவற சபை 361 இல் ஆரம்பிக் கப்பட்டது. 432 இல் அயர்லாந்திற்கு வருகை தந்த பட்ரிக் அவர்கள் அங்கு துறவற சபையை ஆரம்பித் தார். 529 இல் நூர்சியிஸ் புனித ஆசீர்வாதப்பர் தமது துறவற சபையை ஆரம்பித்தார். மோன்ற்கஸ்ஸின் என்ற மடமே அவரது சபையின் தலைசிறந்த இல்ல மாகும்.

உரோமை சாம்ராஜ்யத்தை ஆக்கிரமிப்புச் செய்த மிலேச்ச இனத்தாருக்கு கிறிஸ்தவ சமயத்தைப் போதித்து அவர்களை நற்பண்புள்ளவர்களாக உருவாக்கிய பெருமை ஆசீர்வாதசபைத் துறவிகளையே சாரும் 1182 - 1226 இத்தாலி தேசத்தில், அசிவியைச் சேர்ந்த புனித பிரான்சிங்கு அசிசியாரின் துறவற சபையைப் பற்றி நோக்குவோம்.

ஏழ்மை, கற்பு, கீழ்ப்படிதல் புண்ணியங்களைக் கடைப் பிடித்து முறைப்படி வாழ்வது அவரது துறவற சபையின் விசேட குறிக்கோளாகும். அவர்களது நோக்கம் ஏழைகளுக்கு நற்செய்தியைப் போதிப்பதாகும்.

1203 இல் பிரசங்கம் செய்யும் டோமினிக்கன் சபை உருவாகியது. அல்பிஜென்சன் பேதக சிந்தனைகள் பரவிய வேளையில் கிறிஸ்தவ விசுவாசிகளுக்கு சத்திய வேதத்தை விளக்கி அவர்களின் விசுவாசத்திற்கு நிலையான அடித்தளத்தை டொமினிக்கன் துறவிகள் உண்டு பண்ணினார்கள். பரீசில் சர்வகலாசாலை ஒன்றை நிறுவி கல்வி சம்பந்தமாக உயர் சேவையையும் இத்துறவிகளாற்றினார்கள் என்று சரித்திரவாயிலாக அறிய முடிகிறது,

யேசு சபைக் குருக்கள் மறைப்பணியை ஆற்றுவது போன்று கல்வியிலும் ஆர்வம்மிக்கவர்கள் லொயேலா இக்நேஹியஸ் என்பவர்தான் இதன் ஸ்தாபகர் ஆவார் (1491 - 1556) கீழ் நாடுகளில் மறைபரப்புப்பணி புரிந்த பிரான்சிஸ் சவேரியார் யேசு சபையைச் சேர்ந்த துறவி ஆவார்.

செபத் தொண்டுக்காகத் தம்மை அர்ப்பணித்த ஒரு சபையாகக் கார்மேல் சபை விளங்குகிறது. கல்வி வளர்ச்சிக்காக உழைத்த அகுஸ்தீனர் சபையையும் நாம் மறக்க முடியாது.

- ஐரோப்பிய நாகரீகம்
- கல்வி
- மறைப்பணி
- இரக்கப்பணி

ஆகிய துறைகளில் இத்துறவிகள் ஆற்றிய சேவையை எம்மால் மறக்க முடியாது, உலக ஈடுபாட்டின் மத்தியிலும் கிறிஸ்துவைப் பின்பற்றி தமது முன்மாதிரிகையான வாழ்வின் மூலம் சமய மறுமலர்ச்சியை உண்டாக்கினார்கள் என்பது குறிப்பிடத்தக்கதே.

**வேத அறிஞாகள்**

மத்திய யுகத்தின் கடைசிப் பகுதி கல்விமேலோங்கிய யுகமாகும். கிறிஸ்தவ சபையின் உழைப்பின் பயனாக சலெர்னோ, பொலொஞ்ஞோ, பரீஸ் ஆகிய நகரங்களில் விஞ்ஞானம், சட்டப்படிப்பு, தத்துவம், இறையியல் படிப்பிற்கான சர்வ கலாசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன திருச்சபையினுள் தலைசிறந்த பண்டிதர்களும் இக்காலப் பகுதியில் தோன்றினார்கள். அன்சலம் பொனவெஞ்சர் தோமஸ் அக்குவானஸ் ஆகிய புனிதர்கள் இப் பண்டிதர்களுள் சிலர். கிறிஸ்தவ சபை சீர் குலைந்த வேளையில் சபைக்கு இவர்களாற்றிய பணி பாராட்டத்தக்கதே

மத்திய யுகம் பற்றிய அறிவைப் பரிசீலிக்க பரீட்சை ஒன்றினை நடத்திப் பார்ப்போம்.

செவ்வைபார்த்தல் 2   பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக.

(1) கிறிஸ்தவ சமயத்தைத் தழுவிய குளோவிஸ் அரசன்

i லொம்பார்ட் கோத்திரத்தைச் சேர்ந்தவன்.
ii பிரான்க் கோத்திரத்தைச் சேர்ந்தவர்
iii விசுக்கொத் கோத்திரத்தைச் சேர்ந்தவர்
iv கானஸ்ற் கோத்திரத்தைச் சேர்ந்தவர்

(2) உரோமை சாம்ராஜ்சியத்தின் வீழ்ச்சியோடு கிறிஸ்தவ சபையின் அதிமுக்கிய பொறுப்பு,

i மிலேச்ச இனத்தவர்களை கிறிஸ்தவ சமய கோட்பாடுகளுக்கமைய நற்பண்புள்ளவர்களாக்குவது.
ii அரச அதிகாரத்தைத் தம் வசப்படுத்தியோர்களைத் தயார் செய்வது.
iii சாம்ராஜ்யத்தை மறுபடியும் கட்டி எழுப்ப உரோமை ஆட்சியாளருக்கு உதவி புரிவது.
iv ஆக்கிரமிப்பாளருடன் சேர்ந்து உரோமை ஆட்சியாளருக்கு எதிராகப் போர் புரிதல்.

(3) பரிசுத்த உரோமை சாம்ராஜ்யத்தின் மூதலாவது அரசன்,

i கொன்ஸ்தாந்தின்
ii ஜஸ்டீன்
iii மக்சிமிலியன்
iv சாலமோன்

(4) சபையின் தலைவர்களுக்கும் அரசர்களுக்குமிடையில் பிளவு ஏற்படக் காரணம்,

i அரசர் பேதக் கொள்கைகளை ஏற்று சபையைத் துன்புறுத்தியது.
ii சபையின் தலைவர்களுக்கு மறைப்பணி புரிய அரசர்களிடமிருந்து உதவி கிடையாமை
iii அரசர்கள் சமய ஆட்சிக்கும் சமயத் தலைவர்கள் அரசாட்சிக்கும் இடையூறாக இருந்தமை

(5) அரேபிய கோத்திரத்தினால் சபைக்கு ஏற்பட்ட எதிர்ப்புக்கள்.

i கிறிஸ்தவ விசுவாசிகளின் மத்தியில் இஸ்லாம் மதத்தைப் பரப்புவதற்கு முயற்சித்தது.
ii சபைக்குச் சொந்தமான தேவாலயங்களையும் மடங்களையும் கொள்ளையடித்தது.
iii சபையின் தலைவர்களைக் கைதாக்கி அவர்களை நாடு கடத்தியது.
iv சபையைப் பராமரிப்பதற்குத் தேவையான சொத்துக்களைத் தம்வசப்படுத்தியது.

(6) சிலுவை யுத்ததினால் சபைக்குக் கிடைத்த பயன்,

i பரிசுத்த பூமி உட்பட பலஸ்தீன நாடு முழுவதும் சபைக்குச் சொந்தமாகியது.

ii மத்திய, கீழ் தேச நாடுகளில் சமயப் பணிகளில் சுதந்திரமாக இயங்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது.

iii சமயத் தலைவர்களின் ஒற்றுமை அவசியம் என்னும் கருத்து உண்டாகியது.

iv சபைக்குக் கீழ்நாடுகளிலிருந்து கிடைத்த ஆக்கிரமிப்புக்கள் அகன்றமை.

(7) கிறிஸ்தவ சபை கீழ்நாடு, மேல்நாடு எனப் பிரிவதற்கான காரணம்,

i பிரதேச எல்லைக்கான கேள்வி
ii சபையின் சடங்கு முறைகள் பற்றிய கேள்வி
iii பரிசுத்த பூமியின் உரிமை பற்றிய கேள்வி
iv சாம்ராஜ்சியத்திற்குச் சார்பாக இருப்பது பற்றிய கேள்வி

(8) அல்பிஜென்சன் பேதகம் பரவிய வேளையில் சபையின் விசுவாசத்தை உறுதிப்படுத்துவதற்காக உழைத்தவர்கள்,

i அகுஸ்தீனர் சபையினர்
ii ஆசீர்வாதப்பர் சபையினர்
iii பிரான்சிஸ்கன் சபையினர்
iv டோமினிக்கன் சபையினர்

(9) அன்சலம், பொனவெஞ்சர், தோமஸ் அக்குவானஸ் ஆகியோர்,

i மூன்று வேத அறிஞர்கள்
ii மூன்று வேத சாட்சிகள்
iii மூன்று சபைத் தந்தையர்கள்
iv மூன்று சபைத் தலைவர்கள்.

(10) உலகைச் சார்ந்த சபையினுள் சமய மறுமலர்ச்சியானது.

i அரசு ஆட்சியாளர்களினால் உண்டானது.
ii சபையைத் துன்புறுத்தியவர்களினால் உண்டாகியது.
iii யாத்திரைகளில் பங்குபற்றியவர்களால் உண்டானது
iv துறவிகளினால் உண்டானது

உங்கள் விடைகளை மொடியூலின் இறுதியில் உள்ள விடைகளுடன் ஒப்பிடுக.

## 5.0 கிறிஸ்தவ சபையின் நவீன யுகம்

மத்திய யுகத்தின் முடிவில் ஐரோப்பாவில் மறுமலர்ச்சி உண்டாயிற்று. அக்காலப் பகுதியில் மக்கள் மத்தியில் தேசிய உணர்ச்சிகள் மேலோங்கியது. பல்வேறுபட்ட நாடுகளில் சுதந்திரமான கிறிஸ்தவ சபைகளை ஆரம்பிக்கும் எண்ணம் உண்டாயிற்று. உலகைச் சார்ந்த சபையினுள் புனரமைப்பு அவசியம் என்பதைப் பொறுப்பு வாய்ந்தவர்கள் அறிந்திருந்தார்கள் இக் கருத்துக்களுக்குச் சபையின் ஆதரவும் பிரதிபலனும் கிடைத்தது.

திரிதெந்தின் சங்கமும் இரண்டாம் வத்திக்கான் சங்கமும் முன்வைத்த சபையின் சீர்திருத்தங்களையும் பற்றி இப்பொழுது பார்ப்போம்.

15 ஆம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் ஐரோப்பாவில் விஞ்ஞானம், கலை, சிந்தனை மறுமலர்ச்சி உண்டாயிற்று. அச்சியந்திரம் கண்டுபிடிக்கப்பட்டதுடன் புதிய கருத்துக்கள் வேகமாகப் பரவியது. மக்கள் மத்தியில் தேசிய உணர்ச்சிகளும், சிந்தனை வளர்ச்சியும் ஏற்பட்டகடன் உரோமை சாம்ராஜ்யத்திலிருந்து விலகி சுதந்திரமான ஆட்சி முறையை ஆரம்பிக்க வேண்டும் என்ற சிந்தனை பிரதேச ஆட்சியாளருக்கு அவசியமாயிற்று. இவ்வாறன சிந்தனை சமயம் தொடர்பாகவும் உதயமாகியது.

ஐரோப்பாவில் சில பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பரிசுத்த தந்தையின் தலைமைத்துவத்திலிருந்து விலகி தனியான சுதந்திர கிறிஸ்தவ சபைகளை ஏற்படுத்த விரும்பினர். சபை லௌகீக நோக்குடன் செயலாற்றியது இதற்குச் சான்றாகும். சபையில் புனரமைப்பு அவசியம் என்பதைப் பொறுப்புவாய்ந்த பலர் தெரிந்து கொண்ட போதிலும் உரிய காலத்தில் அதற்கான நடவடிக்கைகளை எடுக்கத்தவறியது கவலைக்குரிய செயலாகும். இதன் பயனை இப்போது ஆராய்வோம்.

### புரட்டஸ்தாந்து புனரமைப்புக்கள்

மத்திய யுகத்தின் கடைசிப்பகுதியில் , கீழ்நாடுகளில் குருத்துவ வாழ்வில் குழப்ப நிலை தென்பட்டது. முறையாகப் பயிற்சி பெருத பலரின் சமய அறிவும் திருப்திகரமற்றதாயிற்று. சிலர் செல்வந்தர்களாக வாழ்ந்தார்கள். இன்னுமொரு பகுதியினர் பொருளாதாரம் குன்றியவர்களாய் வாழ்ந்தனர். இச்சூழல் மத்தியில் வாழ்ந்த குருக்கள் சிலருக்கு ஏற்றத்தாழ்வு என்னும் பிரிவினையை அகற்றும் எண்ணம் தோன்றவில்லை. ஜேர்மனியில் இதற்கான ஆர்வம் உச்சக்கட்டத்தை அடைந்தது.

இதற்கிடையில் சபையில் தலைமைத்துவம் சம்பந்தமான எதிரொலிகள் எழுந்தன. பரிசுத்த தந்தையின் ஆட்சி

யிலிருந்து விலகி கிறிஸ்தவ சபைகளை ஆரம்பிக்க சில நாடுகளின் ஆட்சியாளர்கள் முன்வந்தனர். விசுவாசம் இறையியலா அல்லது சபைத்தலைவர்களின் சம்பிரதாயத்திலா தங்கியுள்ளது? என்னும் மாறுபட்ட சிந்தனை உதயமாகியது.



மக்கள் எதிர்பார்த்த சபையின் புனரமைப்பிற்காக உழைக்க முன்வந்த மாட்டின் லூதரைப்பற்றி இப்பொழுது நோக்குவோம். அகுஸ்தீனர் சபையைச் சேர்ந்த குரவரான இவர் விற்றென்பார்க் சர்வகலாசாலையின் ஓர் விரிவுரையாளர் ஆவார். இறையியல் மறை ஆசிரியராகவும் விளங்கினார். சபையின் வளர்ச்சி குன்றியதன் காரணமாக அனைத்தின் மீதும் வெறுப்பு கொண்டார். சமயம் சம்பந்தமான அவரின் சில கொள்கைகள் சபையின் போதனைகளுக்கு முரணாக இருந்தது. மாட்டின் லூதர் முதலில் சபையூடாகச் சமயப் புனரமைப்பைச் செய்ய விரும்பினார். ஆயினும் அதற்கான சந்தர்ப்பம் அவருக்கு வாய்க்கவில்லை. அதனால் அவருடைய சிந்தனைகள் சமயக் கிளர்ச்சியை ஏற்படுத்தும் முறையில் அமைந்தன. லூதரின் சமயக் கிளர்ச்சிக்கான காரணம் ''பரிபூரண பலன்களை விற்பது'' என்பதாகும் என்று சரித்திரம் எடுத்துக் கூறுகின்றது.

1517 ஆம் ஆண்டை விசேட பரிபூரண பலன் ஆண்டாகப் பரிசுத்த தந்தை லியோ அவர்கள் பிரகடனப்படுத்தினார். புனித இராயப்பர் தேவாலயத்தின் பசிலிக்கா கட்டட நிதிக்காக இவ்வாண்டைப் பூரண பலன் பெற்றுக் கொள்ளும் ஆண்டாக்கியதைப்பற்றிய போதனையை மக்களுக்கு வழங்குவதற்காக டொமினிக்கன் சபையைச் சேர்ந்த ஒரு குரு விற்றென் பார்க் மாளிகைக்கு வந்தார். பூரண பலன் வழங்குவதை எதிர்த்து லூத்தர் 95 காரணங்கள் அடங்கிய குற்றப் பத்திரிகை ஒன்றை விற்றென் பார்க் தேவாலயத்தில் ஒட்டிவிட்டார். இவரின் குற்றச்சாட்டுக்கள் பிழையானது என்ற முடிவிற்கு வந்த பரிசுத்த தந்தை அவற்றை வாபஸ் பெறும்படி அவருக்குக் கட்டளையிட்டார். பெரிய பவனியாக நகர வாயிலுக்கு வந்த லூத்தர் அக்கட்டளைப் படிவத்தை எல்லோர் முன்னிலையிலும் தீயிலிட்டார். இதன் பயனாக 1521 இல் லூத்தர் உரோமை கிறிஸ்தவ சபையிலிருந்து விலக்கப்பட்டார். அதன் பின்னர் மாட்டின் லூத்தர் சமயமும், திருவழிபாடும் சம்பந்தமான தனது கருத்துக்கேற்ப உரோமைக்கு எதிரான நவீன கிறிஸ்தவ சபையொன்றை ஆரம்பிக்கும் ஆர்வம் கொண்டார்.

பரிசுத்த மடல்களை ஜேர்மன் மொழியில் மொழிபெயர்த்தார். சிறுவர் வளர்ந்தோருக்கான கேள்வி விடை கொண்ட மறை போதக உபதேச நூல்கள் இரண்டை தாய்மொழியில் தயார் செய்தார். இவையூடாக சமய அறிவைப் பரப்பியது அவரது உயர்ந்த சேவையாகும். அவரது நவீன போதனைகள் நோர்வே, சுவீடன், டென்மாக் ஆகிய நாடுகளிலும் பரவியது. படிப்படியாக ஐரோப்பியர்கள் கத்தோலிக்கர், புரட்டஸ்தாந்தர் என்று இரு பிரிவுகளாகப் பிரிந்தனர்.

16 ஆம் நூற்றுண்டில் பரிசுத்த தந்தையின் தலைமைத் துவத்தை எதிர்த்த இவர்கள் புரட்டஸ்தாந்து சபையினர் என்று அழைக்கப்பட்டனர். 1517 இல் ஆரம்பித்த இச்சமயம் போரில் பல நாடுகளைச் சேர்ந்த ஆட்சியாளர்களும் பங்குகொண்டதால் கத்தோலிக்கர் புரட்டஸ்தாந்தவர்களுக்கிடையில் நீண்ட காலப்போர் ஆரம்பித்தது. ஐரோப்பாவில் 1618 - 1648 வரையிலான 30 ஆண்டுகள் நடந்த போர் இதற்குச் சான்றும்.

மாட்டின் லூதரின் போதனைகளுக்குச் சமமான சிந்தனைகளைக் ஹென்றிச்ஸ்வில்லி என்பவர் சுவிற்சர்லாந்திலும் ஜோன் கல்வின் பிரெஞ்சு நாட்டிலும் சமயப் போரை உண்டுபண்ணுவதற்கு முனைந்தவர்கள் ஆவர். இவர்களின் கொள்கைகளைப் பிரெஸ்பேரியன் சபையும் தழுவியது.

**இங்கிலாந்து சபை**

சுதந்திரமான கிறிஸ்தவ சபை இங்கிலாந்துக்கு வருகை தந்ததைப்பற்றி இப்போது பார்ப்போம். இங்கிலாந்தின் 8 ஆவது ஹென்றி அரசன் லூதரின் சிந்தனையை எதிர்த்தார். 1533 இல் தனது மனைவியை விலக்கி விட்டு இரண்டாம் முறை திருமணம் செய்வதற்குப் பரிசுத்த தந்தையிடம் அனுமதிகோர, அவர் எதிர்த்த காரணத்தினால் 1534 ஆம் ஆண்டில் இங்கிலாந்து சபையை உண்டாக்கினார். இங்கிலாந்தைச் சேர்ந்த ஆயர் மன்றமும் கத்தோலிக்க மக்களில் பலரும் உரோமை ஆட்சியிலிருந்து விலகினர். புதிய சபை அரசனின் ஆட்சியின்கீழ் திருத்தி அமைக்கப்பட்டது. கண்டபிரி ஆயர் அதன் சமய தலைமைப் பதவியை ஏற்றுக்கொண்டார். புதிய சபையின் சீர்திருத்தத்தின் பின்பு இங்கிலாந்தில் கத்தோலிக்க சமய கலாபனை ஏற்பட்டது துறவிகள் ஆச்சிரமங்கள் மூடப்பட்டன. தோமஸ் அவர்களும் பிஷர் ஆயரும் சமயத்திற்காக தமது உயிரைத் தியாகம் செய்தவர்களாவர். இங்கிலாந்து சபையினர் திருவழிபாட்டை ஆங்கிலத்தில் நடத்திப் பொதுவான செபப்புத்தகத்தையும் சுதந்திரமான விவிலிய மொழிபெயர்ப்பையும் செய்து கொண்டனர்.

**சபையின் சீர்திருத்தங்கள்**

புரட்டஸ்தாந்து போரிற்கு முன்பே சபையினுள் சீர்திருத்தங்களின் அவசியத்தை சபையின் தலைவர்கள் அறிந்திருந்தனர். இதற்காக அமைதியான சேவையைத் துறவிகளே ஆற்றினர். 1534 - 1545 ஆண்டுகளில் 3 3 ஆவது சின்னப்பர் 4ஆவது பியூஸ் என்னும் பரிசுத்த தந்தை அவர்களின் காலத்தில் நடத்தப்பட்ட திரிதெந்தின் திருச்சங்கத்தினூடாகப் பல தேவைகள் நிறைவேற்றப்பட்டன.



திருச்சபையின் மறுமலர்ச்சிக்கு வழிகாட்டியாக அமைந்த திரிதெந்து திருச்சங்கத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் விளைவுகள் சிலவற்றைப் பார்ப்போம்.

- சமயத்தைப் பற்றிய, புரட்டஸ்தாந்து சீர்திருத்த வாதிகளின் சிந்தனைகளைத் தவிர்த்து இறைவெளிப் பாட்டிற்குப் பரிசுத்த வேதாகமத்தையும், வாய் மொழி மரபுகளையும் வெளிப்படுத்தி அதன் அத்தி வாரத்தின் மீது விசுவாசத்தின் சத்தியங்களை விளக்கினர்.

- சென்மபாவம், ஆன்ம இரட்சனியம், திருவருசாதன்ங்கள், பரிபூரண பலன், புனிதர்கள் மீதான பக்தி ஆகியவைகளைப்பற்றிய கற்பித்தலும், மறை பரப்புப் பணியும்.


**பரிசுத்த தந்தையின் ஆட்சி கலைக்கப்படுவது:-**

பரிசுத்த தந்தை 9 ஆவது பியுஸ் அவர்களின் காலத்தில் இத்தாலியை ஒருமைப்பாட்டின் கீழ் கொண்டு வந்த் கவுர், கரிபால் என்பவர்களால் 1870 இல் பரிசுத்த தந்தையின் ஆட்சி கலைக்கப்பட்டது. வத்திக்கான் நகரம் மட்டுமே பரிசுத்த தந்தைக்கு உரிமையாயிற்று. இச்சமயத்தில் பரிசுத்த தந்தை வத்திக்கானுள் சிறைபட்டவரானர். லௌகீகம் குன்றிய இவ்வேளையில் சபை ஆன்மீகத்துறையில் மேலோங்கலாயிற்று.

பரிசுத்த தந்தை 9 ஆவது பியுஸ் அவர்களின் தலைமையில் 1870 ஆம் ஆண்டு முதல்வது வத்திக்கான் பொதுச்சங்கம் நடைபெற்றது. விசுவாசத்தின் அடிப்படை உண்மைகள் பற்றிய தெளிவான அறிக்கை வெளியிடப்பட்டது.

**சபை ஐரோப்பாவிற்கு வெளியே பரவுதல்:-**

இதுவரை ஐரோப்பாவிற்குள் வளர்ச்சியடைந்த சபை ஐரோப்பாவிற்கு வெளியே எவ்வாறு பரவியது எனப் பார்ப்போம்.





துருக்கியரின் ஆக்கிரமிப்பின்போது தரை மார்க்கப் பிரயாணங்கள் யாவும் தடை செய்யப்பட்டதால் மேல் நாடுகளுக்குச் செல்வதற்கு ஐரோப்பியர் கடல் மார்க்கத்தை நாடினர். புதிய வழியைத் தேடிச் சென்ற போர்த்துக்கேயர் 16 ஆம் நூற்றுண்டின் ஆரம்ப காலத்தில் ஆசியாவில் குடியேற்றங்களை அமைத்தனர். அதன் பின்னர் பிரேசிலையும், ஆபிரிக்காவின் கடலோரப் பகுதிகளையும் கைப்பற்றினர்.

மேற்கு இந்திய தீவுகள், மெக்சிக்கோ ஆகிய பிரதேசங்கள் உட்பட தென் அமெரிக்காவின் பல பகுதிகளையும் ஸ்பெயினையும் கைப்பற்றினர்.


கிறிஸ்தவ மறைத் தூதுவர்கள் இக்குடியேற்றங்களில் சபையைப் பரப்பும் பணியில் ஈடுபட்டனர். பிரான்சிஸ்கன், டொமினிக்கன், இயேசு சபையைச் சேர்ந்த தூதுவர்கள் இந்தியா, இந்தோனேசியா, சீனு, ஜப்பான்

ஆகிய நாடுகளிலும், பின்னர் இலங்கையிலும் கிறிஸ்தவ மதத்தைப் பரப்புவதற்கு முன் வந்தனர். யேசு சபையையும், பிரான்சிஸ்கன் சபையையும் சேர்ந்த மறைபரப்பாளர்கள் தென் அமெரிக்காவில் சபையைப் பரப்பினர்.



பிரித்தானியர்களால் கைப்பற்றப்பட்ட வட அமெரிக்காவிற்கு புரட்டஸ்தாந்து மதத்தினர் முதன் முதலாக வருகை தந்தனர். 17 ஆம் நூற்றூண்டின் மத்திய பகுதியில் கத்தோலிக்கம் அங்கு பரவத் தொடங்கியது.

கிறிஸ்தவ மறைபோதகர்கள் மறையைப் போதித்ததோடு சுகாதார சேவைகள், இரக்கப் பணிகள் ஆகியவற்றிலும் தமது கவனத்தைச் செலுத்தினுர்கள். இருண்ட கண்டம் என்று அழைக்கப்பட்ட ஆபிரிக்காவிற்கு ஒளி ஏற்றியவர்களுள் ஸ்வோன்ஷெடின் டேவிற் லிவின்ஸ்டன் என்பவர்கள் முதலிடத்தை வகிக்கின்றனர். அவுஸ்திரேலியாவிற்கு அனுப்பப்பட்ட சிறைக் கைதிகளின் நலனுக்காக இங்கிலாந்துச் சபையினர் மிகவும் உழைத்தனர் தூரகிழக்கு நாடுகளில் உழைத்தவர்களுள் பீற்றர் டேமியன் குருவானவர் விசேட இடத்தை வகிக்கின்றூர்.



நவீன யுகத்தின் இறுதி நூற்றூண்டுகளில் முடிசூட்டப்பட்ட திருத்தந்தையர்கள் ஆற்றிய சேவையை சுருக்கமாக ஆராய்வோம். திருத்தந்தை 13 ஆவது லியோ, தனது ஆன்மீகத் தலைமைத்துவத்தை சுற்று மடல்கள் மூலம் உலகிற்கு வெளியிட்டார். கண்டியின் குருத்துவக் கல்லூரி இவரது தலைமைத்துவத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டது. இவர் 1878 – 1903 வரை ஆட்சி புரிந்தார்.

திருத்தந்தை 10 ஆம் பியுஸ் என்பவர் சட்ட நூல்களைத் தயார் செய்தும், திருவழிபாட்டில் மறுமலர்ச்சியை ஏறபடுத்தியும், திவ்விய நற்கருணை பெறும் சிறுவர்களின் வயதெல்லையைக் குறைத்தும் குருத்துவக் கல்லூரிகளை அமைத்து குருத்துவப் பயிற்சிக்கு விசேட கவனமும் செலுத்தினுர். 1903 – 1914 வரை திருத்தந்தையாக ஆட்சி புரிந்த இவர் உரோமையில் பரிசுத்த வேதாகம ஆய்வு நிலையத்தை நிறுவினுர்.

திருத்தந்தை 11ஆவது பியுஸ், 1929 இல் இத்தாலியில் சர்வாதிகார ஆட்சியாளர்களாக இருந்த பெனிடோ, முசலோனி என்பவர்களுடன் லத்ரன் உடன் படிக்கை செய்து கொள்வதற்கு முன் வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வுடன்படிக்கையின்படி சுதந்திரமான வத்திக்கான் அரசும், லத்ரன் மாளிகையும் இத்தாலி அரசிடமிருந்து திருத்தந்தைக்கு உரிமையாகியது. பணத்தைப் பெறும் உரிமை 1984 ஆம் ஆண்டில் 2 ஆவது அருளப்ப சின்னப்பரினதும் இத்தாலிய அரசின் ஒன்றிணைப்பின் கீழும் நிராகரிக்கப்பட்டது. உலகுடன் திறந்த மனதுடன் உரையாடும் நோக்குடன் இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் 1958 – 1963 வரையிலான காலத்தில் திருத்தந்தை 2 ஆம் அருளப்பரின் தலைமையின் கீழ் நடைபெற்றது.

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் காரியங்களை இப் பொழுது கவனித்து வரும் திருத்தந்தை 2 ஆம் அரு ளப்பர் போலந்து நாட்டைச் சேர்ந்தவராவார்.

நவீன யுகத்தில் கிறிஸ்தவ சபை மூன்று பிரதான பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை ரோமன் கத்தோலிக்கச்சபை, கிரேக்க ஒதடொக்ஸ் சபை, புரட் டஸ்தாந்து சபை என்பனவாகும். ஒதடொக்ஸ் சபை யைத் தவிர்ந்த, திருத்தந்தையின் ஆட்சியை மறுக்கும் சகல கிறிஸ்தவ சபைகளையும் பொதுவாகப் புரட்டஸ் தாந்து என்று அழைப்பர். லூத்தரின் சபை, பெஸ்பி டேரியன் சபை, இங்கிலாந்து சபை, பப்டிஸ்ட் சபை மெதடிஸ் சபை, இரட்சனியசேனை, பெந்தக் கோஸ்து சபை ஆகியவை புரட்டஸ்தாந்து பிரிவைச் சேர்ந்த பிரதான குழுக்களாகும்.

சபையின் நவீன யுகத்தைப்பற்றிக் கற்ற உங்களை பரீட் சைக்கு அழைத்துச் செல்கின்றோம்.

செவ்வைபார்த்தல் 3

பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

(1) புரட்டஸ்தாந்து சீர்திருத்தத்திற்கான காரணம்,

i அரசர்கள் சபையின் நடவடிக்கைகளுக்குத் தடையாகியது
ii ஐரோப்பாவின் குன்றிய பொருளாதாரமுறை
iii அவசியமான சீர்திருத்தங்கள் உரிய நேரத்தில் செயற்படத் தவறியமை
iv அதிகார ஆசைப்பட்டவர்களின் தூண்டுதல் கள்

(2) மாட்டின் லூத்தரின் சமயப் போரின் இறுதிக் காரணம்,

i பரிபூரண பலன்.
ii விற்றன்பார்க் சர்வ கலாசாலையில் விரிவுரை யாளராயிருப்பது.
iii சபையின் தலைமைத்துவம்
iv துறவற சபையின் ஒழுங்கு முறை

(3) இங்கிலாந்து சபையை ஆரம்பிப்பதில் முன்னோடி யாகச் செயலாற்றியது.

i கான்டபரி ஆயர்
ii தோமஸ் மூவர் அவர்கள்
iii பிஹர் ஆயர்
iv 8 ஆவது ஹென்றி அரசன்

(4) புரட்டஸ்தாந்து போரிற்குப் பின்பு சபையின் சீர்திருத்தத்திற்காகக் கூட்டப்பட்ட சங்கம்,

i வத்திக்கான் பொதுச்சங்கம்
ii திரிதெந்து பொதுச்சங்கம்
iii நிசேயா சங்கம்
iv லத்திரன் சங்கம்

(5) சபையின் வளர்ச்சிக்காகச் சபையினூடாகச் சீர் திருத்தங்களைச் செய்த மூன்று புனிதர்கள்,

i பீற்றர்கனீசியஸ், பிலிப்புநேரியன். ஜான்பப் டிஸ்ட்டிலாசால்.
ii அயிரேனியஸ், அம்புரோஸ், ஜோன் கிறிஸ் தோஸ்தம்
iii அகஸ்தீன், கில்ளரி, ஜஸ்டின்
iv பகோமியஸ், தியத்தோர், பற்றிக்

(6) வத்திக்கானில் சிறைக்கைதியாக்கப்பட்ட முதலாவது திருத்தந்தை,

i 3 ஆவது சின்னப்பர்
ii 3 ஆவது யூலியஸ்
iii 9 ஆவது பியுஸ்
iv 10 ஆவது லியோ

(7) 13 ஆவது லியோ திருத்தந்தையினுல் ஆற்றப்பட்ட விசேட பணி,

i இரண்டாவது வத்திக்கான் சங்கத்தைக் கூட்டியது
ii இத்தாலி அரசின் வதந்தியை நிறுத்துவது
iii பரிசுத்த வேதாகம ஆய்வு நிறுவனத்தை நிறுவியது.
iv கண்டியில் பரிசுத்த தந்தையின் குருத்துவக் கல்லூரியை ஆரம்பித்தது

(8) இந்தியா, இலங்கை உட்பட கீழ் நாடுகளில் சபையின் வளர்ச்சிக்காக உழைத்தவர்கள்,

i பிரான்சிஸ்கன், டொமினிக்கன், யேசு சபையின் மறை போதகர்கள்
ii கார்மேல், அகஸ்டீன், ஆசீர்வாதப்பர் சபை மறைபோதகர்கள்
iii சிலேசியன், ஒத்தோரியன், மரியாயின் துறவற போதகர்கள்
iv கபுச்சின், ரிடெந்தோரியன், லிகோரியன் துறவற போதகர்கள்

(9) 1 ஆவது வத்திக்கான் பொதுச்சங்கத்தைக் கூட்டியவர்.

i திருத்தந்தை 6 ஆவது பியுஸ்
ii திருத்தந்தை 9 ஆவது பியுஸ்
iii திருத்தந்தை 10 ஆவது பியுஸ்
iv திருத்தந்தை 11 ஆவது பியுஸ்

(10) வட அமெரிக்காவில் பிரித்தானிய நாடுகளில் முதலாவதாகப் பரவிய சமயம்,

i புரட்டஸ்தாந்து சமயம்
ii கத்தோலிக்க சமயம்
iii நெஸ்டோரியன் கிறிஸ்தவ சமயம்
iv பெஸ்பிடேரியன் கிறிஸ்தவ சமயம்

(11) சபையின் லௌகீக அதிகாரங்களை இழப்பதன் காரணமாக ஏற்பட்ட நன்மை,

- i சபையின் அங்கத்தவர்கள் பணந் திரட்டுவதற்குப் பல வழி வகைகளைக் கையாண்டது
- ii சபை மறைத்தூதுவப் பணியில் உதாசீனமாயிருந்தது
- iii சபை ஆன்மீக வழியில் வளர்ச்சியடைந்திருந்தது
- iv சபை அரசியல் உதவியை நாடியமை

(12) ஆபிரிக்காவிற்கு ஒளிஉதயமாகியதற்கான காரணம்

- i இயந்திரப்புரட்சி
- ii தங்கத்துறை
- iii ஆன்மீகத்துறை
- iv கிறிஸ்தவ மறை போதகர்கள்

உங்கள் விடைகளை மொடியூலின் இறுதியில் உள்ள விடைகளுடன் ஒப்பிடுக.

கிறிஸ்தவ சபையின் சரித்திரத்தைக் கற்ற உங்களை இலங்கையில் சபையின் செயற்பாட்டை அறிய அழைத்துச் செல்கிறோம்.

பகுதி iv

## 6.0 இலங்கைத் திருச்சபையின் சரித்திரம்

இறை அரசைப்பற்றிய நற்செய்தி 16 ஆவது நூற்றூண்டிலே இலங்கைக்கு வருகை தந்த கிறிஸ்தவ மறைத் தூதுவர் ஆற்றிய அர்ப்பண வாழ்வின் மூலமாக இலங்கை முழுவதும் பரவ ஆரம்பமாகியது இதற்கு முன்னரே கிறிஸ்தவ மதத்தைப்பற்றி இலங்கையர் அறிந்திருந்தார்கள் என்பதை உறுதிப்படுத்தும் சில ஆதாரங்களைத் தருகின்றோம்.

இயேசு பாலகனை வணங்குவதற்குக் கீழைத்தேச ஞானிகள் பெத்தலேமிற்கு வந்தார்கள் அவர்களுள் ஒருவர் இலங்கையர் ஆவார் என்று வாய்மொழி மரபு உள்ளது. அரச பரம்பரையைச் சேர்ந்த கஸ்பார் பெரிய பெருமான் என்னும் இவ்வறிஞர் இந்தியாவிற்கு வருகை தந்த தோமஸ் அப்போஸ்தவரிடத்தில் திருமுழுக்குப் பெற்று பின்பு கிறிஸ்தவ சமயத்திற்காக உயிரைப் பலியாக்கினர் என்று கூறப்படுகின்றது.

தோமஸ் அப்போஸ்தலர் இலங்கைக்கு வருகை தந்தார் என்று இன்னுமொரு வாய்மொழிக் கூற்றும் உண்டு. அக்காலத்திற்குரிய கல்வில் வெட்டப்பட்ட சிலுவையொன்று முகத்துவாரப் பிரதேசத்திலிருந்து கண்டெடுக்கப்பட்டதாகவும் இன்னுமொரு மரபு கூறுகிறது.

ஆறும் நூற்றூண்டில் அநுராதபுரத்தில் வசித்த கிறிஸ்தவர்களைப் பற்றி பர்சியாவைச் சேர்ந்த கொஸ்மஸ் என்னும் எழுத்தாளர் இந்தியாவிற்கு அப்பால் இந்திய சமுத்திரத்தில் தப்பிரபேன் என்று ஒரு தீவு உள்ளது. அங்கு இறைபணியாளரும், விசுவாசிகளும், ஒரு

கிறிஸ்தவ தேவாலயமும் உண்டு. இந்தியா அத்தீவை சீல தீபம் என்று அழைக்கின்றனர். தேவாலயமானது பர்சியாவைச் சேர்ந்த கிறிஸ்து பக்தர்களுக்கு உரிமையானது. அவர்கள் இங்கு வசிக்கிறுர்கள். பர்சியாவைச் சேர்ந்த ஒரு குருவானவரும், திருத்தொண்டரும் சமய திருவருட்சடங்குகளை நடத்துகின்றனர். ஆயினும் இந் நாட்டவர்களும் அரசனும், அந்நிய மதத்தினர் என்று கூறுகின்றனர். இக் கிறிஸ்தவர்கள் வியாபாரத்திற்காக இங்கு வந்த பர்சியர்கள் என்பதை எழுதப்பட்ட சில கடிதங்கள் வாயிலாக அறியலாம் அவர்கள் நெஸ்டோரிய துறவற சபையைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள் என்பதை அநுராதபுரத்தில் கண்டெடுக்கப்பட்ட நெஸ்தோரிய சிலுவை காட்டி நிற்கிறது என்கின்றுர்.

அரபு பூமி சாஸ்திர விஞ்ஞானி அல்இத்திரிசியின் கூற்று

பொலநறுவை காலத்தில் இஸ்லாம், கிறிஸ்தவ யூத சமயத்தவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு நான்கு சிங்கள பிரதிநிதிகள் அரசசபையில் இருந்தார்கள். அவ்வேளையில் வெளிநாட்டுக் கிறிஸ்தவர்களைத் தவிர்த்து தேசிய கிறிஸ்தவர்கள் அங்கு இருக்கவில்லை.

**போர்த்துக்கேயர் காலம்:-**

கீழைத்தேசத்தின் வழியாகப் போக்குவரத்து மார்க்கத்தைத் தேடிய போர்த்துக்கேயரின் நோக்கம் கிறிஸ்தவ பக்தர்களையும் உருவாக்குவது என்று கூறப்படுகின்றது இம்முயற்சியில் ஈடுபட்ட கடற்படையினர்கள் 1505 இல் இலங்கைக்கு வந்து சேர்ந்தனர். அக்கடற்படையினரின் படைத்தளபதி லொறென்சோடே அல்மெய்டா ஆவார்.

இலங்கை கோட்டை, கண்டி, யாழ்ப்பாணம் என்று மூன்று இராசதானிகளாக இருந்தது. இலங்கையின் வன்னிப் பிரதேசத்திற்குப் பிராந்திய தலைவர்களும் இருந்தனர். இக்காலப் பகுதியில் உள்நாட்டு அாசர்களின் மத்தியில் ஒற்றுமை குன்றியது.

இதன் காரணமாக மேற்குப் பிரதேசங்களில் அரசியல் தொடர்புகளைச் செய்து கொள்வது போர்த்துக்கேயருக்கு இலகுவாயிற்று. போத்துக்கேயருடன் சில பிரான்சிஸ்கன் குருக்களும் வந்தனர். இவர்கள் இலங்கையருக்குக் கிறிஸ்தவ மதத்தைப் போதித்தனர். பிரான்சிஸ்கன் குருக்களுக்குப் பின்னர் டொமினிக்கன், அகுஸ்தினர், இயேசு சபைக் குருக்கள் வருகை தந்தனர். இக்காலப்பகுதியில் இலங்கை முன்னேற்றம் குன்றிய நிலையில் காணப்பட்டது. ஐரோப்பிய மொழியின் நுட்பப் புரட்சியின் காரணமாக கலாசாரம் வளர்ச்சியுற்றது. அது போர்த்துக்கேயர் ஊடாக இலங்கையருக்குக் கிடைத்தது மட்டுமன்றி இலங்கையரின் வாழ்க்கையிலும் துரித முன்னேற்றம் காணப்பட்டது. 2000 ஆண்டுகளாக சமய நற்புகழோடு வளர்ச்சி பெற்றிருந்த இலங்கையர் எந்த ஒரு கருத்துக்களும் செவிமடுத்த போதி

லும் நன்மை, தீமை என்பதை நன்கு விளங்கிக்கொள்ளும் ஆற்றல் படைத்தவர்களானுர்கள். ஆகையால் கிறிஸ்தவ மதத்திற்கு செவிமடுக்கும் ஆசையும் இவர்களுள் காணக்கூடியதாயிருந்தது.

தேசிய மொழியைக் கற்று மக்களின் பழக்கவழக்கங்கள், குணங்கள் அனைத்திற்கும் ஏற்ற முறையில் மக்களோடு வாழ்ந்த காரணத்தினுல் அவர்களின் மறைபரப்புப் பணியைச் சிறந்த முறையில் ஆற்ற முடிந்தது. இல்லறவாசிகளுடன் பழகுதோடு, வயோதிபர், நோயுற்ருேருக்கு உதவுவதும் பல வகையான இரக்கச் செயல்களில் ஈடுபடுவதன் மூலமும் இலங்கை மக்களின் அன்பிற்கும் மதிப்பிற்கும் ஆளாகினர். 1659 தொடங்கி 150 ஆண்டுகள் ஆற்றிய சேவையின் பயனுகத் தொன் யுவான் தர்மபால அரசனும் அரசியும், நிக்கபிட்டி பண்டார, கொனப்பு பண்டார, தோனு கத்தரீனு போன்ற பரம்பரயைச் சேர்ந்தவர்களும் சில அறிவாளிகளும் கிறிஸ்தவ மதத்தைத் தழுவிக் கொண்டனர்.

கத்தோலிக்க மதத்தைத் தழுவிய இலங்கையரிற் பலர் உறுதியான விசுவாசத்தோடும், விளக்கத்தோடும் மதத்தை அனுசரித்து வாழ்வதற்கான சான்றுகள் பல உண்டு. 1543 இல் யாழ்ப்பாணத்தை ஆட்சி புரிந்த சங்கிலி அரசன் கிறிஸ்தவர்களைக் கொலை செய்வதாக மிரட்டிய போதிலும் 600 பேர் தமது மதத்தைப் புறக்கணியாது மரணத்தைத் தழுவியது சிறந்த ஒரு சான்ருகும் அதன் பின்னர் வருகை தந்த ஒல்லாந்தரின் ஆட்சிக் காலத்திலும் பரம்பரை பரம்பரையாக விசுவாசத்தைக் கடைப்பிடித்து கத்தோலிக்கராக வாழ்ந்ததும் இன்னுமொரு சான்ருகும்.

சமயசடங்கு முறைகளை நடத்துவதற்கும், சமய முறைபடி வாழ்வதற்குத் தேவையான உபதேசங்களை வழங்குவதற்கும் குருக்கள் இன்றி தவித்த இவ்வேளையில் பொது நிலையினரின் தலைமைத்துவத்தின் கீழ் திருவழிபாடு நடத்தப்பட்ட பாராட்டத்தக்க ஒரு நிகழ்வே.

போர்த்துக்கேயரின் மறைப்பணி கல்வியோடு இணைந்த நன்கு திட்டமிடப்பட்ட ஒன்ருகும். ஒவ்வொரு தேவாலயத்திற்கும் அருகே ஒரு பாடசாலை கட்டப்பட்டிருந்தது. கிராமத்தில் வாழும் குழந்தைகளுக்கு இப் பாடசாலைகள் நன்கு பயனளித்தன. குருத்துவப் பயிற்சிக்காகக் ''கொலிஜ்'' என்று அழைக்கப்பட்ட உயர் கல்வி நிறுவனங்களும் நிறுவப்பட்டன. ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்கும் பொருட்டு ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை ஒன்றும் அமைக்கப்பட்டது. போர்த்துக்கேயரின் காலத்தில் யேசு சபையைச் சேர்ந்த நற்செய்திப் போதகர்களால்தான் முதன்முதல் கல்வி நிலையங்கள் நிறுவப்பட்டன. பின்பு பிரான்சிஸ்கன், டொமினிக்கன் சபையைச் சேர்ந்த மறைபோதகர்களாலும் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. 53 பாடசாலைகள் இக்காலப் பகுதியில் நிறுவப்பட்டிருந்தன.

போர்த்துக்கேயரின் மறைபணியின் காரணமாக இலங்கைச் சமுதாயத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் சிலவற்றை நோக்குவோம்.

- திருமணவாழ்வின் தூய்மையையும் குடும்ப வாழ்வின் மேன்மையையும் உணர்ந்தமை.
- நவீன கட்டிட, ஓவியக் கலை உதயமாகியமை
- சமயப்பாடங்கள், தேசிய நாடகக் கலைக்கான அடித்தளம் இடப்பட்டமை.
- ''கொன்ஸ்தாந்தின் போர்'' போன்ற காவியங்களூடாகக் கிறிஸ்தவ சிந்தனைகள் சங்கீத வடிவில் வெளி வந்தமை.
- ஆடை அணிகள், ஒழுங்கு முறைகள் பற்றிய புதிய சிந்தனைகள் தோன்றியமை.

ஒல்லாந்தர் காலம்:–

17 ஆம் நூற்றாண்டில் மத்திய பகுதியில் இலங்கையை வந்தடைந்த ஒல்லாந்தர் போர்த்துக்கேயரை வெற்றி கொண்டு அவர்களுடைய பிரதேசங்களையும் கைப்பற்றினர். ஐரோப்பாவிலும் இவர்களிடையே பிளவு ஏற்பட்டிருந்த காரணத்தினால் இலங்கையிலும் அப்பிளவு தொடர்ந்தது. போர்த்துக்கேயர் இலங்கையில் பரப்பிய கத்தோலிக்க சமயத்தை ஏற்றுக் கொண்ட மக்களையும் எதிர்த்தனர். இலங்கையைச் சேர்ந்த கத்தோலிக்கர் போர்த்துக்கேயருடன் ஒன்று சேர்ந்து தம்மை எதிர்த்து சதி செய்வதாக சந்தேகித்தனர். புரட்டஸ்தாந்து மதத்தைச் சேர்ந்த இவர்கள் கத்தோலிக்க சமயத்தை அனுசரிக்கும் சுதந்திரத்திற்குத் தடை செய்தனர். போர்த்துக்கேய மறை போதகர்களை இலங்கையிலிருந்து வெளியேற்றினர் குருக்கள் இன்றி கத்தோலிக்க விசுவாசிகள் ஆயன் இல்லா ஆடுகளைப் போன்று வாழ்ந்தனர். இவர்களின் குழந்தைகளை ஒல்லாந்தரின் பாடசாலைகளுக்கும் தேவாலயங்களுக்கும் அனுப்புமாறு வற்புறுத்தினர். புரட்டஸ்தாந்து தேவாலயங்களில் நடைபெறாத திருமணங்கள் நிராகரிக்கப்பட்டன.



இலங்கையில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள் அனுபவித்த பல இன்னல்களையும், சீனாவுக்குச் சென்று திரும்பும் வழியில் சொல்லக் கேட்ட யோசவாஸ் அடிகளார் இலங்கைக்கு வந்து இங்கு மறைபணியில் ஈடுபட்டார் என்பதை நீங்கள் அறிவீர்கள். கோவா பட்டினத்தில் பிராமணர் குலத்தில் பிறந்த இவர் ஓராதோரியர் தியான சம்பிரதாயச் சபையைச் சேர்ந்தவர். 1687 இல் ஒரு யாசகனின் வேடம் பூண்டு இலங்கைக்கு இரகசியமாக வந்து இலங்கையை ஒரு மறை மாவட்டமாகக் கருதி ஒல்லாந்த ஆட்சியாளருக்குத் தெரியாதவாறு மிகவும் இரகசியமாக 1711 ஆம் ஆண்டு வரை மறை பணியாற்றினார். 1697 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் கண்டி நகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் வைசூரி நோய் உண்டாகியது. அப்போது நோய்வாய்ப்பட்ட யாவருக்கும் அடிகளார் ஆற்றிய அன்புப் பணியைக் கண்ட கண்டி அரசனான விமலதர்மசூரியன் அவனுடைய மகனான நரேந்திர சிங்கனின் அனுமதியோடு கண்டி இராச்சி

யத்திலும் மறை பரப்புப் பணியாற்றுவதற்கான அனுமதியை அளித்தான்.

மேற்கூறியவாறு யோசவாஸ் அடிகளார்க்கு உதவும் பொருட்டு யாக்கோவே கொன்சுல்வாஸ் அடிகளார் அனுப்பப்பட்டார். இவர் சிங்கள இலக்கியத்தின் ஆரம்ப கர்த்தா ஆவார் என்பது குறிப்பிடத்தக்கது. கொன்கனிப் பிராமண கோத்திரத்திற் பிறந்த இவர் சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் தேர்ச்சி பெற்று செபங்களை இயற்றினர். ஞானோபதேச நூல்களை எழுதினர். இவற்றுள் தேவ வேத, புராணய வேத, காவிய, தேவநீதி விசர்ஜனய, ஞானுன்ஞய, சுகுர்த்ததர்ப்பயை பிரார்த்தயகார்யா வலிய, துக்பிராப்தி, பிரசங்கய, பசன்புத்தகம் இவற்றை இன்றும் காணலாம்.

ஒல்லாந்த மறை போதகர்களினால் போதிக்கப்பட்ட புரட்டஸ்தாந்து பிரஸ்பிடேரியன் கிறிஸ்தவ மதத்தினூடாக இலங்கைச் சமுதாயத்தில் ஆற்றிய பணியை நாம் என்றும் மறக்க முடியாது.

திருமணத்தைப் பற்றி போர்த்துக்கேய மறை போதகர்கள் கொண்டிருந்த உயர்ந்த சிந்தனைகளையே ஒல்லாந்த கருக்களும் வற்புறுத்தினர். போர்த்துக்கேயரினுல் ஆரம்பிக்கப்பட்ட கல்வி முறையையே தொடர்ந்து செய்தன் காரணமாகக் கல்வித்துறையில் பெரும் முன்னேற்றத்தைக் காணக்கூடியதாயிற்று.

இலங்கைக்கு அச்சியந்திரத்தை அறிமுகப்படுத்தியவர்களும் ஒல்லாந்தர்களே. இவர்களின் ஆட்சிக் காலத்தில் 1739 ஆம் ஆண்டில் ஒல்லாந்த புரட்டஸ் தாந்து சபையினுல் பரிசுத்த வேதாகமம் சிங்கள மொழியில் மொழி பெயர்க்கப்பட்டது. நல்லூரிலும், கொழும்பிலும் நிறுவப்பட்ட குருத்துவ கல்லூரிகளில் தேசிய குருக்களுக்குப் பயிற்சியளித்தும் ஒல்லாந்தரின் இன்னுமொரு பணியாகும். தோம்பு எழுதுவதையும் இவர்களே தொடக்கினர். உரோம, ஒல்லாந்த நீதியையும் தேவ வல்லமை நீதியையும் அறிமுகப்படுத்தினர்.

**பிரித்தானியர் காலம்:-**

ஒல்லாந்தருக்குப் பின்னர் 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இலங்கையின் ஆட்சியை பிரித்தானியர் கைப்பற்றினர். இவர்கள் இங்கிலாந்து சபையைச் சேர்ந்தவர்கள். இவர்கள் இலங்கையில் வாழும் மக்களுக்கு அவர்கள் விரும்பிய மதத்தை அனுசரிக்க சுதந்திரத்தை அளித்தனர். அரசின் பூரண ஒத்துழைப்பு கிறிஸ்தவர்களுக்குக் கிடைத்தது.

பிரித்தானிய காலத்தின் முதற்காலப் பகுதியில் இங்கு வந்த இலண்டன் மிசனெரி குழுக்கள் பப்திஸ் சபை வெஸ்லியன் சபை, அமெரிக்கன் மிசனெரி குழுக்கள் ஆங்கில சீ. எம். எஸ். குழுக்கள் அரசின் ஆதரவோடு இலங்கையில் பாடசாலைகளை நிறுவினர். மிசனெரிகளின் தலைமைத்துவத்தின் கீழ் நடத்தப்பட்ட இப்பாடசாலைகள் கிராமங்களிலேயே காணப்பட்டன. இவர்களுள்

கல்வித்துறையில் தேர்ச்சி பெற்றவர்களாக அமெரிக்கன் மிசனெரிமார் விளங்கினர். இக்காலப்பகுதியில் கத்தோலிக்கப் பாடசாலைகள் சுதந்திர நிறுவனங்களாக விளங்கின. அரசின் வர்த்தகத் திட்டங்களுக்கு ஏற்ற; எதிர்காலத்தில் பயனளிக்கக்கூடிய அறிவை இப் பாடசாலைகளூடாகப் பெற்றனர். ஆகையால் ஆங்கிலம், கணிதம் ஆகிய பாடங்களுக்கு முதலிடம் கொடுக்கப்பட்டது. தேசிய மொழி புறக்கணிக்கப்பட்டது.

*1841* க்குப் பின் கல்வியை அபிவிருத்தி செய்யும பொருட்டு பணம் கொடுக்கப்பட்டது. சகல மதத்தினருக்கும் பாடசாலைகளை நிறுவும் நடவடிக்கைகள் அரசாங்கத்தினுல் மேற்கொள்ளப்பட்டது. பரம விஞ்ஞானர்த்த நிறுவகம் தேசிய மொழியில் பௌத்த கல்வியை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டது. கத்தோலிக்கச் சபையால் தொடர்ந்து நடத்தப்பட்ட ஆங்கில மொழி பாடசாலைகளையும், தேசிய மொழி பாடசாலைகளையும் ஆரம்பமாக்கியது. ஆங்கில மொழியில் நடத்தப்படும் பாடசாலைகளுக்குக் கொடுக்கும் அரச உதவிகளை தேசிய கிராமப் பாடசாலைகளுக்கும் கொடுப்பதற்கு வழிசெய்தவர் கிறிஸ்டோப்பர் பொன்ஜின் அடிகளார் ஆவார். இவர் சமய நிறுவனங்களின் உதவியைப் பாடசாலை பெறுவதற்கான திட்டத்தையும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

வேறுபட்ட கிறிஸ்தவ சபையினுல் நடத்தப்பட்ட கல்வி நிறுவனங்களின் பயனுக சுதந்திர சிந்தனைகளை கொண்ட கல்விமான்கள் தோன்றினர்கள். *1948* இல் தேசிய சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்ளும் பொறுப்பு வாய்ந்தவர்கள் உருவாக்கப்பட்டதும் இந்த கிறிஸ்தவ கல்வி முறையினுலேயாகும். சுதந்திரப் போரின் போது பௌத்த சகோதரர்களுடன் தோளோடு தோள் வைத்து செயலாற்றிய ஆர். டபிள்யூ. பெரேரா போன்ற கிறிஸ்தவர்களை எம்மால் மறக்க முடியாது.

கல்விச்சேவை தவிர, வேறுபட்ட பல சமூக முன்னேற்ற வேலைகளிலும், இரக்கச் சேவைகளிலும் கிறிஸ்தவ சபைகள் கவனம் செலுத்தியது. வைத்திய சேவை, புனரமைப்புச்சேவை, தொழில்நுட்பக் கல்வி கற்பித்தல், அனுதை இல்லங்களை நடத்துவது, பின்தங்கிய பிரதேசங்களை அபிவிருத்தி செய்வது போன்ற சேவைகளை நடத்தினர்.

இலங்கையின் நலனைக் கருதி செயற்பட்ட கிறிஸ்தவ சபைகளுள் கத்தோலிக்க சபை, ஒல்லாந்து பிரஸ்படேரியன், இங்கிலாந்து சபையின் கிளைச் சங்கமான இலங்கைச்சபை, வெஸ்லியன், மெதடிஸ் சபை, பப்திஸ்சபை, இலங்கை பெந்தக்கொஸ்தே சபை, அமெரிக்கன் மிஷன் சபை, இரட்சணியசேனை ஆகியவற்றை நன்றியோடு நினைவு கூருகின்ருேம்.

கிறிஸ்தவ சபைகளின் செல்வாக்கைப் பெற்ற பண்டிதர்களினுல் கல்வியின் வளர்ச்சியைக்கருதி ஆற்றப்பட்ட பணிகளைப்பற்றி இப்போது நோக்குவோம்.

இக்காலத்திலேயே பப்திஸ் சபைச்சேர்ந்த சார்ள்ஸ் காட்டர் என்ற இறைபணியாளர் ஆங்கிலம் – சிங்களம், சிங்களம் – ஆங்கிலம் ஆகிய அகராதியைச் செய்தார். கத்தோலிக்கச் சபையைச் சேர்ந்த குருவானவர் எஸ் பி. பெரேரா அவர்கள் சரித்திர நூல் தயாரிப்பதில் பண்டிதர் ஆவார். இங்கிலாந்து சபையைச் சேர்ந்த தியதோர் பெரேரா என்னும் இறை பணியாளர் சிங்கள மொழியில் பிரசித்தி பெற்ற நூலை இயற்றிய பண்டிதர் ஆவார்.

எம், ஜே. லொகொக் அடிகளார் விஞ்ஞானத்தில் பெரும் பணியாற்றிய கத்தோலிக்க குரு ஆவார். பீற்றர்பிள்ளை குருவானவர் சமுதாயத்தில் நீதி நியாயத்திற்தாக உழைத்த கல்விமான் ஆவார். ஞானப்பிரகாசம் அடிகளார் கிறிஸ்தவம் அல்லாத மக்களுக்கு சமய அறிவை ஊட்டிய தமிழ் மொழிப் பண்டிதர் ஆவார். இவர்களைப் போன்று கல்வியின் வளர்ச்சிக்காக உழைத்த பொது நிலையினரின் பணியும் பாராட்டுதற்குரியது. அவ்வாறே இலங்கைத் தேசிய கிறிஸ்தவ சங்கத்தினர் நடத்தும் வேதாகமச் சங்கத்தின் பணியும் பாராட்டத் தக்கதே.

சுதந்திர யுகம்:

1948 ஆம் ஆண்டில் இலங்கை சுதந்திரம் அடைந்த பின்பு அரசாங்கமே பாடசாலைகளைப் பொறுப்பேற்றது. இதன் காரணமாக கிறிஸ்தவ சபைகளில் சமயக்கல்வி தொடர்பான முக்கியமான மாற்றங்கள் ஏற்பட்டன. இதனால் கத்தோலிக்க சபையிலும் திட்டமிடப்பட்ட மறைக்கல்வி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. மறைமாவட்டங்களில் மறைக்கல்வி நடுநிலையங்கள் நிறுவப்பட்டன. தேசிய மறைக்கல்வி நிலையமும் இயங்க ஆரம்பித்தன. இதே போன்று வேறு கிறிஸ்தவ சபைகளும் மறைக்கல்வி, விவிலிய பாடநெறி, விவிலியப்பொது அறிவுப்போட்டி ஆகியவற்றின் மூலமாக சமய அறிவை வளர்த்து ஒழுங்கான சமய வாழ்க்கை நடத்தும் வழி வகைகளை மக்களுக்குக் கற்றுக்கொடுத்தது.



2 ஆவது வத்திக்கான் பொதுச் சங்கத்தின் மறுமலர்ச்சி தொடர்பான முடிவுகள் திருவழிபாடு தேவாலயங்களைச் சோடினை செய்வது, சங்கீதம் ஆகியவற்றை தேசியப் பண்பாட்டிற்கேற்ப செய்வதற்கு வழி வகுத்துள்ளது.

இலங்கையின் வேறுபட்ட சபைகளின் ஒன்றிணைப் பிற்காக இப்போது செயல் திட்டங்கள் மேற்கொள்ளப் பட்டிருப்பது கிறிஸ்தவ மக்களுக்கு மகிழ்ச்சியளிக்கும் விடயமே. சகல கிறிஸ்தவ சபைகளும் ஒன்றிணைந்து வெளியிட்ட பொதுவான சிங்கள மொழி விவிலிய மொழி பெயர்ப்பு, நற்செய்தியைப் பரப்பும் பணியில் எடுக்கப்பட்ட முதலாவது மகிழ்ச்சியான நிகழ்ச்சியாகும்.

இலங்கை கத்தோலிக்க சபையானது கொழும்பு, சிலாபம், கண்டி, காலி, யாழ்ப்பாணம், திருகோணமலை, மன்னார், பதுளை, அநுராதபுரம் என 9 மறை மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. சபையின் எல்லா ஆயர்களும் இலங்கையர் ஆவார். வத்திக்கான் அரசுடன் இலங்கையரசு தூதுவர் மூலம் உறவு கொண்டுள்ளது. வத்திக்கான் அரசின் தூதுவர் ஒருவர் இலங்கையில் வசிக்கின்றார்.

இங்கிலாந்து சபையின் கிளைச்சபையான இலங்கைச் சபை இரு பிரதான பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது ஒன்று கொழும்பு தியோகிசியா, மற்றது குருநாகல் தியோகிசியா. இரண்டும் ஆயர்களினால் ஆட்சி செய்யப்படுகிறது. பப்திஸ் சபை, மெதடிஸ்சபை, இரட்சணியசேனை, பெந்தக்கோஸ்சபை போன்ற கிறிஸ்தவ குழுக்களும் பல்வேறு பிரதேசங்களில் மறைபணி புரிவதோடு சமூக சேவை, கல்வி ஆகிய துறைகளிலும் ஈடுபட்டு இலங்கையின் முன்னேற்றத்திற்காக உழைக்கின்றனர்.

இலங்கைத் திருச்சபையின் சரித்திரத்தைக் கற்ற உங்களைப் பரீட்சைக்கு அழைத்துச் செல்கின்றோம்.

**செவ்வைபார்த்தல் 4**

பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

(1) கொஸ்மஸ் என்ற பர்சியன் எழுத்தாளரின் ஏடுகளின் மூலம் எமக்குக் கிடைக்கும் செய்தி,

i அரசின் அனுமதி பெற்ற கிறிஸ்தவ சபை இலங்கையில் இருந்தது.
ii தேசிய குழுக்கள் இருந்தது.
iii 6 ஆம் நூற்றாண்டில் குழுக்கள் இங்கு இருந்தமையாகும்
iv அநுராதபுர காலத்தில் கிறிஸ்தவ பக்தர்கள் அங்கு இருந்ததாகும்.

(2) இலங்கை மக்களுக்கு கிறிஸ்தவ மதத்தை முதன் முதலாகப் போதித்த மறைபரப்பாளர்கள்,

i யேசு சபையைச் சேர்ந்தோர்
ii டொமினிக்கன் சபையைச் சேர்ந்தோர்
iii அகஸ்டீன் சபையைச் சேர்ந்தோர்
iv பிரான்சிஸ்கன் சபையைச் சேர்ந்தோர்

(3) இலங்கைக்கு வந்த முதலாவது மறைபோதகர்களின் பணி வெற்றியளிக்கக் காரணம்,

i அவர்களின் தேசிய மொழியையும், மக்களின் பழக்க வழக்கங்களையும் கற்று தேசியத் கலாசாரத்தையும் புரிந்து கொண்டமையால்
ii அவர்கள் அரச ஆதரவைப் பெற்று உயர் நிலைகளில் வசித்தவாறு மக்களைத் தம் வசப்படுத்தியமையாகும்.

iii தேசியவாதிகளைவிட அவர்கள் உயர் நிலையில் செயலாற்றியமை அவர்களுக்கு கௌரவத்தையும், மதிப்பையும் கொடுக்க வழிவகுத்தமை

iv அவர்கள் பெற்றுக்கொண்ட வெளிநாட்டு உதவிகளைக் கொண்டு மக்களுக்கு உணவு பெற்றுக் கொடுத்து அவர்களின் மனதைக் கொள்ளை கொண்டமையாகும்.

(4) இலங்கை ஆதிக் கத்தோலிக்கரின் விசுவாசத்திற்கான சாட்சி,

i சமய கலாபனைக்கு எதிராகப் போர் புரிவது.
ii கலாபனைக் காலத்திலும் கூட விசுவாசத்தைக் கைவிடாமை.
iii மறை போதகர்களுடன் சேர்ந்து மறையைப் போதித்தது.
iv கொழும்பிலிருந்த ஒல்லாந்த ஆளுநர்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தமை.

(5) இலங்கையின் அப்போஸ்தலராக அறிமுகம் செய்யப்பட்டவர்.

i பிரான்சிஸ்சேவியர்.
ii யாக்கோமே கொன்சால்வாஸ்.
iii கிறிஸ்டோப்பர் பென்ஜன்
iv யோசவாஸ்.

(6) பரிசுத்த வேதாகமம் சிங்கள மொழியில் மொழி பெயர்க்கப்பட்டது.

i போர்த்துக்கேயர் காலத்தில்.
ii ஒல்லாந்தர் காலத்தில்.
iii பிரித்தானியரின் காலத்தில்
iv சுதந்திர காலத்தில்

(7) கத்தோலிக்கப் பாடசாலைகளை அரசு கையேற்ற பின்பு கிறிஸ்தவ சபை எக்காரணத்திற்காக திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டது,

i திருவழிபாட்டின் மறுமலர்ச்சிக்கு.
ii கிறிஸ்தவ ஆசிரிய ஒன்றிப்பிற்கு.
iii மறைக்கல்வியின் வளர்ச்சிக்கு.
iv புதிய வழிவகைகளைக் கொண்டு நற்செய்தியைப் பரப்புவதற்கு.

(8) இன்றைய கிறிஸ்தவ சபைகளின் நோக்கம்,

i சபைகளின் ஒன்றிப்பிற்காக செயற்படுவது.
ii பொதுவான தலைமைத்துவத்தை அமைத்தல்.
iii மத்திய ஆட்சி முறைக்காக.
iv பொதுவான வழிபாட்டு முறைக்காக.

(9) இலங்கையில், கிறிஸ்தவ, சிங்கள இலக்கியத்தின் ஆரம்பகர்த்தா,

i யோசவாஸ் அடிகள்.
ii யாக்கோமே கொன்சால்வாஸ் அடிகள்.
iii சார்ள்ஸ் காட்டர்.
iv தியத்தோர் பீ. பெரேரா அடிகள்.

(10) நற்செய்தியைப் பரப்பும் பணியில் கிறிஸ்தவ சபைகளின் ஒன்றிணைப்பின் நடவடிக்கை.

i பொதுவான இறை வழிபாடுகளில் பங்கெடுப்பது.
ii தேசிய பிரச்சினையைப் பொது நலனுக்கருதி பிரசுரங்களை வெளியிடுவது.
iii பொதுவானசிங்களவிவிலியமொழிபெயர்ப்பை வெளியிடுவது.
iv வேறு சமய விழாக்களின் போது ஒன்று சேருவது.

உங்கள் விடைகளை மொடியூலின் இறுதியில் உள்ள விடைகளுடன் ஒப்பிடுக.

இதுவரை படித்தவற்றின் பொழிப்பைக் கவனிப்போம்.

## 7.0 பொழிப்பு

பெந்தக்கோஸ்து நாளன்று சிறிய குழுவாக உலகிற்குத் தென்பட்ட கிறிஸ்தவ சபையானது ஜெருசலேமை மத்திய நிலையமாகக் கொண்டு வளர்ச்சியடைந்தது. யூதத் தலைவர்களின் துன்புறுத்தல்களுக்கும் மிரட்டலுக்கும் பயந்த ஆதிக் கிறிஸ்தவர்கள் ஜெருசலேமிலிருந்து வேறு இடங்களுக்குப் பிரிந்து சென்றனர். துன்புறுத்தற்காரரில் ஒருவரான சவுல் மனந்திரும்பி கிறிஸ்தவ மதத்தைத் தழுவி பவுல் என அழைக்கப்பட்டார். கிறிஸ்தவ சபையின் வளர்ச்சிக்காக அயராது உழைத்தார். 300 ஆண்டுகளுக்குள் கிறிஸ்தவ சபை உரோமை அரசு முழுவதிலும் பரவியது. திருச்சபையின் முதலாவது திருத்தந்தையாக இராயப்பர் உரோமையில் முடிசூட்டப்பட்டார். கிறிஸ்தவர்களை அரச துரோகிகளாகக் கணித்த உரோமை அரசர்கள் 250 வருட காலமாக சபையைத் துன்புறுத்தினர். இக்காலப் பகுதியில் கிறிஸ்தவ மதத்தைப் பற்றிய உண்மையான விளக்கங்களைக்கொடுத்த அப்பொலொஜிஸ்தர்களும் இறையியல் கல்வியை வளர்த்த சபைத் தந்தையர்களும் தோன்றினர். அத்தோடு கல்வி நிறுவனங்களும் உருவாகின. கொன்ஸ்தாந்தின் அரசனின் காலத்தில் சுதந்திரம் பெற்ற சபையினுள் தோன்றிய பேதங்களை சபைத்தலைவர்கள் நிராகரித்தனர்.

உரோமையரசின் வீழ்ச்சியுடன் ஆக்கிரமிப்புக் காரர்களான மிலேச்ச இனத்தவர்களை சீர்திருத்தம் செய்யும் பொறுப்பு சபையைச் சார்ந்ததாயிற்று. லௌகீக வாழ்வு உயர்ந்ததின் காரணமாக சபையின் ஆன்மீக வாழ்வு குன்றியது இஸ்லாம் மதம் பரவியதன் காரணமாக துருக்கியரிடமிருந்து பரிசுத்த பூமியைப் பெற்றுக் கொள்வதற்காக சிலுவை யுத்தத்தை நடத்தினர். இக்

காலத்தில் சபை மேல் நாடு, கீழ் நாடு என இரு பிரிவு களாயிற்று. சடங்குமறை காரணமாகவே இப்பிரிவு இடம் பெற்றது. குன்றிய நிலையிலிருந்த ஆன்மீக வாழ்வை உயர்ந்த துறவற சபைகள் தோன்றின.

மறுமலர்ச்சியின் பின்பு ஐரோப்பா முழுவதிலும் தேசி யப் பற்று காரணமாக பல இனத்தவர்கள் திருத்தந் தையின் ஆட்சியிலிருந்து விலகி தனியான சபைகளை உருவாக்கினர். மாட்டின் லூதர் ஜேர்மனியில் புரட்டஸ் தாந்து சபையை ஆரம்பித்தார். இங்கிலாந்திலும் 8 ஆவது ஹென்றி அரசனின் கீழ் சுதந்திரமான சபையை உருவாக்கினன். திரிதெந்து சங்கத்தினலும், புனிதர் களின் உழைப்பினலும் சபையினுள் மறுமலர்ச்சியைக் காணக் கூடியதாக இருந்தது. ஐரோப்பாவை விட்டுச் சென்ற மறை போதகர்கள் இக்காலத்தில் சபையை சட்டிபெழுப்ப முன்வந்தனர். சுற்றுமடல்கள் எழுதப் பட்டன. கல்லூரிகள் நிறுவப்பட்டது இக்காலத்தில் இம் முயற்சிகளில் ஆர்வமிக்க திருத்தந்தையர்கள் தோன்றினர்கள். திருத்தந்தை 23 ஆம் அருளப்பர் ஆரம்பித்த 2 ஆம் வத்திக்கான் சங்க திட்டங்களைத் திருத்தந்தை 2 ஆவது அருளப்ப சின்னப்பர் செயற் படுத்தும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

16 ஆவது நூற்றாண்டின் ஆரம்ப பகுதியில் இலங்கைக்கு வருகை தந்த ஐரோப்பிய மறை போதகர்களின் சேவை யின் காரணமாக இலங்கையில் வாழும் மக்கள் கிறிஸ்தவ நற்பண்புகளுக்கேற்ப வளர்ச்சியடைந்தன. இடைவி டாத துன்புறுத்தல்களை இலங்கை விசுவாசிகள் எதிர் கொண்ட போதிலும் அவர்களுடைய விசுவாசம் கிறிஸ் தவப் பொது நிலையினரின் தலைமைத்துவத்தாலும், யோசவாஸ் அடிகளாரின் வீர தீரச் சேவைகளாலும் நிலை கொண்டது. கிறிஸ்தவ கல்வியூடாகச் சுதந்திர இலங்கையின் வளர்ச்சிக்காக உழைக்கும் ஒரு பகுதியி னர் உருவாகினர்கள். இலங்கையிலுள்ள எல்லா சபை களையும் ஒன்று சேர்க்கும் பொருட்டு செயற்றிட்டங் கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 8.0 பிற்சோதனை

1. பொருத்தமான சொல்லைத் தெரிந்து இடைவெளியை நிரப்புக.

அநுராதபுரம், மிலான், நூர்ஹியா, விற்றென்பார்க், குருநாகல், ஜெருசலேமில், பரீஸ், எபீசஸ், உரோமை, அலெக்சாந்திரியா, கொன்ஸ்தாந்திநோபில், அந்தி யோக்கியாவிலே, மன்னர்.

1 ................ ல் பெஸ்தக்கொஸ்து தினத்தன்று இராயப்பர் போதித்தார்.

2 ..... ........... கிறிஸ்தவ சபையின் முதலாவது திருத்தந்தையின் உத்தியோகப்பூர்வ வாசஸ்தல மாயிற்று.

3 ................ ல் கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட்டனர்.

4 ஆதித் கிறிஸ்தவரின் பிரதான கிறிஸ்தவ மறைக் கல்வி நிலையம் ................ நகரில் நிறுவப்பட்டிருந்தது.

5 ................ சங்கத்தினூடாக உரோமின் கிறிஸ்தவசபைக்குப் பூரண சுதந்திரம் கிடைத்தது.

6 ஏரியின் பேதகத்தை நிராகரித்த 2 ஆவது பொதுச் சங்கம் ................ கூடியது.

7 ................ துறவறசபையின் சட்ட வல்லுனராவார்.

8 கல்வித்துறையில் விசேட சேவையாற்றிய டொமினிக்கன் சபையினரால் ................நகரில் சர்வகலாசாலையொன்று நிறுவப்பட்டது.

9 புரட்டஸ்தாந்து சமய சீர்திருத்தவாதியாகத் திகழ்ந்த மாட்டின் லூதர் ................சர்வகலாசாலையின் விரிவுரையாளராவார்.

10 ................ நகரிலிருந்து நெஸ்டோரியன் சிலுவையொன்றைப் புதைபொருள் ஆராய்ச்சியாள கண்டுபிடித்தனர்.

2 ''அ'' பகுதியில் கொடுக்கப்பட்டவற்றில் பொருத்தமானதை ''ஆ'' பகுதியில் தெரிந்தெடுத்து இணைக்கவும்.

| | அ | | ஆ |
|---|---|---|---|
| 1 | ஆதித் திருச்சபையின் விசேட பண்பாயிற்று. | (அ) | லௌகீகத்திற்கு முக்கியத்துவம் கொடுத்ததால் சமய அறிவு குன்றியமை. |
| ii | ஜெருசலேம் சங்கம் கூடுவதற்கான காரணம் | (ஆ) | கிறிஸ்தவ சமயத்தைப் பற்றிய தெளிவான விளக்கமும் பேதங்களுக்கு விடையளிப்பதுவுமாகும். |
| iii | சபையின் ஆரம்ப கலாபனைக்கான காரணம். | (இ) | சபையின் சடங்குகளும் ஒருமைப்பாட்டுப் பிளவுமாகும். |
| iv | அப்போலொஜிஸ்தர்களின் முக்கியத்துவம். | (ஈ) | கிறிஸ்துவுக்கு சான்று பகர்வதும், அனைத்தையும் அப்போஸ்தலர் முன்னிலையில் பொதுவாக வைத்திருப்பதுவும். |

| | | | |
|---|---|---|---|
| v | சபை கீழ்நாடு மேல் நாடு எனப் பிரிவதற்கான காரணம். | (உ) | விருத்தசேதனமும் மோயிசனின் கட்டளைகளும். |
| | | (ஊ) | உரோமையரசனை அரசனுக ஏற்காமையும் தேவாலயங்களில் நடைபெறும் பலிப் பூசையில் பங்கு கொள்ளாமையும். |

(3) பின்வருவன சரியாயின் (√) சரியென்றும், பிழையாயின் (×) பிழையென்றும் அடையாளமிடுக.

1 சின்னப்பரென்று அழைக்கப்பட்டவர் ஆரம்பத்தில் கிறிஸ்தவ பக்தர்களைத் துன்புறுத்தினர். ( )

ii 30 ஆம் நூற்றூண்டில் ஜெருசலேம் அழிவிற்குப்பின் கிறிஸ்தவர்கள் சுதந்திரமான சபையாக ஒன்றிணைவதற்கு ஆரம்பித்தனர். ( )

iii ஆதிக் கிறிஸ்தவர்கள் உரோமை சாம்ராச்சியத்தின் அதிகாரத்தைக் கைப்பற்ற முயன்றதைத் தொடர்ந்து சபை எதிர்ப்புகளை எதிர் கொள்ள நேரிட்டது. ( )

iv 64 - 68 இல் நீரோ மன்னனின் கலாபனையினுல் இராயப்பரும், சின்னப்பரும் வேதசாட்சிகளாக உயிர் துறந்தனர். ( )

v உரோமை அரசின் வீழ்ச்சியுடன் கிறிஸ்தவ சபையின் அதிகாரமும் குன்றியது. ( )

vi துருக்கிய சாம்ராஜ்யத்திலிருந்து பரிசுத்த பூமியைப் பாதுகாப்பதற்காக சிலுவை யுத்தம் நடத்தப்பட்டது. ( )

vii இயேசு சபையின் ஸ்தாபகர் லயொலாவின் இக்னேசியஸ் அடிகளாவார். ( )

viii மத்திய யுகத்தின் முடிவில் சபையின் சில தலைவர்கள். இலௌகீகத்தை நாடியதன் காரணமாக ஆன்மீக வளர்ச்சி குன்றிப் போயிற்று. ( )

ix துறவறசபைகள் ஆரம்பமாகியதன் காரணமாக கிறிஸ்தவசபையின் லௌகீக அதிகாரங்களும் வளர்ச்சி பெற்றது. ( )

x மாட்டின் லூதரின் புரட்டஸ்தாந்து சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்காக உவரிச், யோன் ஆகியோர் முக்கிய இடத்தை வகிக்கின்றனர். ( )

xi 8 ஆவது ஹென்றி அரசன் லூத்தரின் கொள்கைகளை வரவேற்றதோடு இங்கிலாந்து சபையையும் ஏற்படுத்தினுன். ( )

xii திரிதெந்து சங்கத்தினுல் திட்டவட்டமான மறை போதக நூல்களைத் தயாரிப்பதற்கு முடிவு எடுக்கப்பட்டது ( )

xiii 1870 இல் முதலாவது வத்திக்கான் சங்கம் 9 ஆவது பியுஸ் திருத்தந்தையின் தலைமையின் கீழ் ஆரம்பமாகியது. ( )

xiv பிரான்சின் அரசனை நெப்போலியன் பொனபாட் சபையின் வளர்ச்சிக்காக உழைத்தான். ( )

xv ஸ்வோன் ஷெடிங், டேவிட்லிவிங்ஸ்டன் என்பவர்கள் இருள் மூடிக்கிடந்த ஆபிரிக்காவில் ஒளியேற்றினர். ( )

xvi திருத்தந்தை 13 ஆவது லியோ அவர்கள் சுற்று மடல்கள் மூலமாக சபைக்கு கற்பிப்பதை ஆரம்பித்தார். ( )

xvii ஆதியிலிருந்தே இலங்கையர் கிறிஸ்தவர்களைப்பற்றி அறிந்திருந்தனர் என்பது வெளிப்படுகின்றது ( )

xviii இலங்கையர் மத்தியில் திருமண வாழ்வின் தூய்மையும், ஒற்றுமையும், மதிப்பும் கிறிஸ்தவ செல்வாக்கால் பெற்றுக்கொள்ளப்பட்டதாகும். ( )

xix சமயத்தைப் பரப்புவதற்கு யோசவாஸ் அடிகளார்க்கு ஒல்லாந்தின் பூரண ஒத்துழைப்பு கிடைத்தது. ( )

xx தேசிய பாடசாலைகளில் கல்வி நிலையை உயர்த்துவதற்காக பண்டிதரான கிறிஸ்டோப்பர் பென்ஜன் அடிகளார் மிகவும் உழைத்தார். ( )

(4) விடை தருக:-

1 திருச்சபையின் முதலாவது திருத்தந்தை யார்?

ii இறைவன் – மனிதன் என்று இருவர் இயேசுகிறிஸ்துவுக்குள் வீற்றிருக்கிறார்கள் என்றும், மரியாள் இறைவனின் அன்னையல்ல என்றும் போதித்த பேதகம் எது?

iii தரித்திரம், தூய்மை, கீழ்ப்படிவு ஆகியவற்றை விசேடமாக அனுசரித்த துறவற சபையின் ஸ்தாபகர் யார்?

iv அவுஸ்திரேலியாவிற்கு நாடு கடத்தப்பட்ட சிறைக் கைதிகளின் நலனுக்காகத் தம்மை அர்ப்பணித்த மறைப்போதகர்கள் எந்த துறவற சபையைச் சேர்ந்தவர்கள்?

v இலங்கையில் உயர்ந்த பணியை ஆற்றும் பைபிள் சங்கம் எந்த நிறுவனத்தினால் நடத்தப்படுகின்றது?

உங்கள் விடைகளை இம் மொடியூலின் இறுதியில் தரப்பட்டுள்ள விடைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்.

இந்த மொடியூலைத் திருப்தியாக கற்று முடித்துள்ளீர்களா, என்பதை பரீட்சிப்பதற்கு, ஒப்படை கீழே தரப்பட்டுள்ளது. கீழே தரப்பட்ட கேள்விக்கு பதில் எழுதி அதனை தொலைதூர கல்வி நிறுவகத்துக்கு அனுப்பிவைக்கவும்.

## 9.0 ஒப்படை

உலகில் கிறிஸ்தவ சபையின் வளர்ச்சிக்கு ஏற்பட்ட தடைகளை இலங்கையில் கிறிஸ்தவ சபையின் வளர்ச்சிக்கு ஏற்பட்ட தடைகளுடன் ஒப்பிடுக. (500 சொற்கள் போதுமானது)

கேள்வியின் முதற் பகுதிக்குக் கொள்கைத் திரட்டின் i, ii, iii ஆம் பகுதிகளையும் இரண்டாம் பகுதிக்கு கொள்கைத் திரட்டின் iv பகுதியையும் பயன்படுத்துக.

## 10.0 விடைகள்

**முற்சோதனை**

(1) iii (2) iv (3) i (4) ii (5) iv
(6) ii (7) iii (8) iv

**செவ்வை பார்த்தல் 1**

(1) iii (2) iv (3) ii (4) iii (5) i
(6) iii (7) ii (8) iv (9) ii (10) iv
(11) iii (12) i

**செவ்வை பார்த்தல் 2**

(1) iii (2) iv (3) ii (4) iii (5) i
(6) iii (7) ii (8) iv (9) ii (10) iv

**செவ்வை பார்த்தல் 3**

(1) iii (2) i (3) iv (4) ii (5) i
(6) iii (7) iv (8) i (9) ii (10) i
(11) iii (12) iv

**செவ்வை பார்த்தல் 4**

(1) iii (2) iv (3) (4) iii (5) iv
(6) ii (7) iii (8) i (9) ii (10) iii

**பிற்சோதனை**

(1) ஜெருசலேம் (2) உரோமை
(3) அந்தியோக்கு (4) அலெக்சாந்திரியா
(5) மிலான் (6) கொன்ஸ்தாந்திநோபிள்
(7) நூர்ஷயா (8) பரீஸ்.
(9) விட்டென்பார்க் (10) அநுராதபுரம்

(2) (i) ஈ (ii) உ (iii)
(iv) ஆ (v) இ

(3) (i) √ (ii) √ (iii) × (iv) √
(v) × (vi) √ (vii) √ (viii) √
(ix) × (x) √ (xi) × (xii) √
(xiii) √ (xiv) × (xv) √
(xvi) √ (xvii) √ (xviii) √
(xix) × (xx) √

(4) (i) இராயப்பர்
(ii) நெஸ்டோரியன் பேதகம்
(iii) அசிசியின் பிரான்சிஸ்
(iv) இங்கிலாந்து சபை
(v) இலங்கையின் கிறிஸ்தவச் சங்கம்.

## 11.0 கிறிஸ்தவ சபையின் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சம்பவங்கள்.

கி. பி.

51 – ஜெருசலேம் திருச்சங்கம்.

64 – 67 – இராயப்பர் சின்னப்பர் வேதசாட்சிகளாகியது.

70 – ஜெருசலேமின் அழிவும் சபை சுதந்திரமாக இயங்க ஆரம்பித்தமையும்.

64 – 305 – உரோமை சாம்ராஜ்யத்துள் சபை துன்புறுத்தப்படுவது.

313 – மிலான் சாசனம் அமுலாகியது.

496 – குளோவிஸ் அரசன் கிறிஸ்தவ மதத்தைத் தழுவியது.

529 – ஆசீர்வாதப்பர் மொன்டிக்கசினோ ஆச்சிரமத்தை நிறுவியமை.

1054 – சபையில் மேல்நாட்டு, கீழ்நாட்டுப்பிரிவு தோன்றியமை.

1500 – மெக்சிக்கோ, தென்அமெரிக்கா, இந்தியா, சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு மறைபோதகர்களின் வருகை.

1505 – இலங்கைக்குப்பிரான்சிஸ்கன் குருக்களின் வருகை (மறைபரப்புப் பணியின் ஆரம்பம்)

1517 – மாட்டின் லூதருக்கு எதிரான 95 குற்றச் சாட்டுகள் பகிரங்கப்படுத்தல்,

1521 – மாட்டின் லூதர் உரோமை கிறிஸ்தவ சபைக்கு எதிராக சபை ஒன்றை ஆரம்பித்தது.

1534 – 8ஆவது ஹென்றி அரசன் இங்கிலாந்து சபையை ஆரம்பித்ததும் – உரோமை ஆட்சியிலிருந்து விலகியதும்.

1535 – தோமஸ் மூவர் அவர்கள் வேதசாட்சியானது.

1543 – மன்னாரில் ஏறக்குறைய 600 கத்தோலிக்கர் சமயத்திற்காக உயிரைப் பலி கொடுத்தனர் (வேதசாட்சிகளாயினர்.)

1556 – கத்தோலிக்க மறைபரப்பு நூல் வெளியிடப்பட்டது.

1647 – ஒல்லாந்தரின் புரட்டஸ்தாந்து மதத்தின் கிளைச்சபை இலங்கையில் ஆரம்பமாகியது.

1658 – இலங்கையின் கரையோரப் பகுதியில் ஆட்சி புரிந்த போர்த்துக்கேயரிடமிருந்து அப்பகுதியை ஒல்லாந்தர் கைப்பற்றியதும் ஒல்லாந்த அரசு கத்தோலிக்க குருக்களை இலங்கையிலிருந்து **வெளியேற்றியது.**

1687 – யோசவாஸ் அடிகள் இலங்கைக்கு வருதல்.

1697 – மலைநாட்டில் யோசவாஸ் அடிகள் ஆற்றிய இரக்கப்பணி.

1705 – யாக்கோவே கொன்சால்வேஸ் அடிகள் இலங்கைக்கு வருதல்.

1711 – யோசவாஸ் குருக்களின் மறைவு.

1742 – காலி நகரைத் தலைமைப்பீடமாகக் கொண்டு பிரஸ்பரேரியன் கிளைச்சபையை இலங்கையில் ஆரம்பித்தமை.

1796 – இலங்கையில் ஒல்லாந்தருக்குச் சொந்தமான பிரதேசங்களைப் பிரித்தானியர் கைப்பற்றியது.

1803 – இங்கிலாந்து சபையின் மறைத்தூதுவர்கள் இலங்கைக்கு வருதல்.

1812 – இலங்கையில் பப்டிஸ் சபையின் கிளைச்சபை ஆரம்பித்தல்.

1814 – மெதடிஸ் சபையின் கிளைச்சபை ஆரம்பம்.

**1854** – அமலோற்பவ விசுவாச சத்தியம் 9 ஆவது பியுஸ் திருத்தந்தையால் பிரகடனப்படுத்தப் பட்டது.

1870 – திருத்தந்தையின் அரசு கலைக்கப்பட்டது.

1883 – **இரட்சனிய** சபையின் கிளைச்சபை இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டது.

1891 – **கண்டியின் குருத்துவக் கல்லூரி, திருத்தந்தை 13ஆவது லியோவினது தலைமைத்துவத்தின் கீழ் ஆரம்பிக்கப் பட்டது.**

**1924** – இலங்கையில் புரட்டஸ்தாந்து சபை ஆரம்பமாகியது.

1929 – லத்ரன் உடன்படிக்கை

1940 – எட்மன் பீரிஸ் குருவானவர் முதலாவது சிங்கள ஆயராக அபிசேகம் பண்ணப்பட்டது.

1945 – இறைபணியாளர் லக்தாஸ்டிமெல இங்கிலாந்தின் முதலாவது ஆயராக அபிசேகம் செயயப்பட்டார்.

1947 – தோமஸ் கூரே முதலாவது **சிங்கள** ஆயராக அபிசேகம் செய்யப்படடார்.

1950 – தேவ தாயார் ஆன்ம உடலோடு விண்ணேற்றமடைந்தார் என்பதை திருத்தந்தை 12 ஆவது பியுஸ் விசுவாச சத்தியமாகப் பிரகடனப்படுத்தினர்.

1958 – 23 ஆவது அருளப்பர் திருத்தந்தையாக அபிசேகம் செய்யப்பட்டார்.

1963 – 6 ஆம் சின்னப்பர் திருத்தந்தையாக அபிசேகம் செய்யப்பட்டார்.

1965 – தோமஸ் கூரே இலங்கையின் முதலாவது கர்தினலாகத் தெரிவு செய்யப்பட்டார்.

1978 – 1 ஆவது அருளப்ப சின்னப்பர் திருத்தந்தையாக அபிசேகம் செய்யப்பட்டார்.

1978 – 2 ஆவது அருளப்ப சின்னப்பர் திருத்தந்தையாக அபிசேகம் செய்யப்பட்டார்.

## கத்தோலிக்கத் திருச்சபையின் பொதுச் சங்கங்கள்

1 1 ஆவது நிசேயா சங்கம் கி. பி. 325

2 1 ஆவது கொன்ஸ்தாந்திநோபிள் சங்கம் கி. பி. 381

3 ஏபியஸ் சங்கம் கி. பி. 431

4 வல்சிடன் சங்கம் கி. பி. 451

5 2 ஆவது கொன்ஸ்தாந்திநோபிள் சங்கம்

6 3 ஆவது கொன்ஸ்தாந்திநோபிள் சங்கம் கி பி. 680 – 681

7 2 ஆவது நிசேயா சங்கம் கி. பி. 787

8 4 ஆவது கொன்ஸ்தாந்திநோபிள் சங்கம் கி. பி, 869 – 870

9 கொன்ஸ்தாந்தின் சங்கம் கி. பி. 1414 – 1418

10 உரோமையில் லத்ரன் சங்கம் கி. பி. 1512 – 1517

11 திரிதெந்து சங்கம் கி. பி. 1545 – 1563

12 1 ஆவது வத்திக்கான் சங்கம் கி. பி. 1869 – 1870

13 2 ஆவது வத்திக்கான் சங்கம் கி. பி. 1962 – 1965

தேசவழமை:– யாழ் ப்பாணத்தில் **தமிழ்மக்கள்** மத்தியில் பல ஆண்டுகள் பழக்கத்திற் கொண்டிகுந்த பழக்க வழக்கங்களைச் சார்ந்த கட்டளைகள்.

தோம்பு:– திருமணம், பிறப்பு, மரணம் ஆகியவற்றைப் பதிவு செய்யும் புத்தகம்.

எழுந்தேற்றம்:– திருப்பணியின்போது அப்பத்தையும் இரசத்தையும் இயேசுக்கிறிஸ்துவின் திருச்சரீரமாகவும் திரு இரத்தமாகவும் மாற்றுவதாகும்.

பொருள்மாற்றம்:– **திருப்பலியின்போது** அப்ப இரச வெளித் தோற்றம் மாறாமல், அது இயேசுக்கிறிஸ்துவின் திரு உடலாகவும் திரு இரத்தமாகவும் மாற்றமடைவதாகும்.

மிலேச்சர்கள்:– 5 ஆம் நூற்றாண்டில் உரோமை சாம்ராஜ்யத்தை ஆக்கிரமிப்புச் செய்த ஒஸ்டிரகொத், விசுக்கொத் ஹன் வண்டல், பிரான்ங் என்னும் இனத்தவர்களாவர். இவர்கள் பின் தங்கிய நிலையில் உள்ள மக்கள்.

குறிப்பு

குறிப்பு

குறிப்பு

ஆசிரியர் தொலைக் கல்விப் பாடநெறி

OFFSET BY THE PACIFIC PRESS (PVT) LTD.